கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
14-4-1974
40 காசு





பூரிப்பூட்டமான நாளிலே முகமலர்ந்த முறுவல்...



புதிய ஆக்பா ஐஸோலி 1 உசித அளவுக்குக் குறைவான வெளிச்சத்திலும் ஒயில்மிளிரும் படங்களை எடுத்துதவுகிறது — தேர்ந்தெடுக்க 2 லென்ஸ் ஸ்டாப்புகளோடு.



ஆக்பா ஐஸோலிடஅமெச்சூர் புகைப்படக் கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புக்களை அளித்திடும் காமெராவாக இது விளங்க 6 காரணங்களாவன :

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் லிவரை இயக்குவது இலகு.
2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் f8 லென்ஸ்.
3. பாதகமான சூழ்நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதிதரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள்.
4. "இரட்டை எக்ஸ்போஷர் லாக்" இயக்க நிலையில் இருப்பதைக் காட்டுகிறது சிவப்புநிற எச்சரிக்கை
5. 2 லென்ஸ் ஸ்டாப்களை உடைய துல்லிய பொருத்தமைப்பு லென்ஸ்.
6. 120 சைஸ் ரோல்பிலிமிலே,16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடையதைவிட 4 அதிகம்). விசேஷ லாகிங் பொறியமைப்பை உடைய பிலிம் சுருட்டுக் குமிழ். இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது.

திரையிடலுக்கெனப் பளிச்சென்ற ஆக்பா கலர் டிரான்ஸ்பேரென்ஸிகளையும் எடுக்கிறது ஆக்பா ஐஸோலி 1. தெள்ளத் தெளிவுள்ள பிரின்டுகளுக்கும், என்லார்ஜ்மென்டுகளுக்கும் எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர் ஆக்பா-கேவர்ட் போட்டோத்தாள்களை.

தயாரிப்பாளர்கள்: நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா

விலை:
ரூ. 143/-
எக்ஸைஸ்
தீர்வை
உள்ளிட்டது.
பிற வரிகள்
தனி.

ISOLY-I

AGI

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவர்ட் இந்தியா லிமிடெட்,
பம்பாய் . நியூ டெல்லி . கல்கத்தா . சென்னை.
*புகைப்படச் சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவர்ட், ஆன்ட்வெர்ப்/லிவர்குஸன் அவர்களின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

உண்மையுள்ள
உங்கள் ஐஸோலி.

5081/AG/15/ Tam


பண்டைய
நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
அன்றைய குஜராத்தி மரபினைப் பின்பற்றி சேலை அணியும் பாணி இன்று மீண்டும் மங்கையரிடையே உலவத் தொடங்கி உள்ளது. அதுவும் அணிந்திடும் சேலை மபத்லாலின் 'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலையாக இருக்குமே எனில், அழகு முழுமை பெற்று முறுவலிக்கிறது!
'மெஃப்ரின்' பாலியெஸ்டர் சேலைகள் பண்டைய கற்பனைகளுக்கு, நவீன ஒயிலோடு கூடிய வண்ணம், வடிவம் மற்றும் நெசவின் நேர்த்தியை கலந்திழைத்து, கிளர்ச்சியூட்டும் மறுமலர்ச்சியை அளிக்கின்றன!
மபத்லால் க்ரூப் அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்



வருக! புத்தாண்டு

புதிய ஆண்டை வரவு கூறிப் போற்றிப் புகழுவோம்
புனிதமான நெஞ்சில் உண்மை ஏற்றி மகிழுவோம்
எதிலும் எங்கும் வெற்றிகாண உறுதி கொள்ளுவோம்
இனியதான பாதைகண்டு அறிவால் வெல்லுவோம்

புத்தன், ஏசு, காந்தி சொன்ன சத்தியம் யாவும்
புவியில் என்றும் சாந்தி காட்டும் புத்தகம் ஆகும்
நித்தம் நித்தம் நினைவில் இந்தத் தத்துவம் கொண்டு
நேர்மையான நெஞ்சமோடு நாளும் வளருவோம்

நல்ல பண்பு நாகரிகம் நமது செல்வங்கள்
நமது தாயும் பிறந்த நாடும் உண்மைத் தெய்வங்கள்
எல்லையில்லாப் பெருமை சேர்ந்த இவை அனைத்தையும்
இறைவனவன் திருவடிகள் காக்க வேண்டுவோம்.

புதிய ஆண்டு புதுமையோடு வருக, வருகவே!
பொங்குமின்ப மங்கலங்கள் தருக, தருகவே!!
உதயமான புதிய ஆண்டில் அமைதி சூழ்கவே!
உண்மை, அன்பு, உயிர்கள் யாவும் வாழ்க வாழ்கவே!!

இ. பாலதண்டபாணி





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்

- பாரதியார்

கோகுலம்

மலர் 3 □ இதழ் 1

ஏப்ரல் 14, 1974

ஆனந்த, சித்திரை 1

□

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம் ரூ. 10-00
ஆறு மாதம் ரூ. 5-00

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

மானேஜர், கோகுலம்
கக்கீப் பூங்கா, சென்னை-600031

□

அட்டை படப் புலிக்குட்டி:

பூனைக்குட்டி இல்லைநான்
புலிக்குட்டிதான்
ஆனைக் கூட்டம் வந்தாலும்
அஞ்சமாட்டேன் நான்

வண்ணப் படம்: திலீப் பானர்ஜி



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

வன்னியால் விலகிய விஷம்

பிரியவிரதன் என்ற ஒரு வேந்தன் இருந்தான். அவன் வறியவர்க்கு வாரி வாரி வழங்குபவன். எளியவர்க்கு இரங்கும் இதயமுடையவன். இவனுக்குக் கீர்த்தி, பிரபை என்ற இரு மனைவியர் இருந்தார்கள்.

இளையாளாகிய பிரபையிடம் மிகுந்த காதல் கொண்டிருந்தான் மன்னன். மூத்தவளை வெறுத்திருந்தான். எல்லாச் சிறப்புக்களும் இளையாளுக்கே செய்தான். மூத்தாளாகிய கீர்த்தி கற்பு நெறியில் நின்று கணவனைக் கடவுளாகக் கருதி அவனுக்கு இனிய பல தொண்டுகள் புரிந்து வந்தாள். இளையாள் மகப் பேற்றையும் பெற்றாள்.

இதனால் மிகுந்த கர்வம் கொண்டிருந்த பிரபை மூத்தாளைப் புழுவினும் கீழாக எண்ணினாள்.

ஒரு நாள் கீர்த்தி தன் கணவனுக்குத் தொண்டு செய்யும் பொருட்டு இளையாளுடைய இல்லத்துக்குச் சென்றாள். பிரபை நாகம் போல் சீறி ''நீ ஏன் இங்கு வந்தாய்?'' என்று கூறிக் காலால் எட்டி உதைத்தாள். அரசன் அதனைப் பார்த்தும் பார்க்காதவனைப் போல் இருந்தான். இதனால் மனம் உடைந்த கீர்த்தி, ''இனிமேல் நாம் வாழ்ந்து என்ன பயன்? மாண்டு போவதே நலம்'' என்று எண்ணி வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

அந்தணர் ஒருவர் எதிரே வந்தார். அவர் அருந்ததியனைய அப் பெண்மணியின் அகக் கவலையை முகக் குறியால் உணர்ந்தார். ''அம்மா! நீ வருந்தாதே. அகில லோக ஏக நாயகராகிய விநாயகரை வழிபாடு செய். கணேசருடைய கருணையால் உன் வாழ்வு மலரும். கணவனும் வழிப்படுவான்'' என்று இன்னுரை இயம்பிக் கணேச மந்திரத்தை உபதேசித்தார்.

கீர்த்தி மந்தார மரத்தின் கீழே எழுந்தருளியுள்ள மகா கணபதியை, அன்புடன் வழிபடுவாளாயினாள். பாங்கியர் கொணர்ந்து தரும் அறுகு முதலியவற்றைக் கொண்டு உள்ளம் உருகிக் கண்ணீர் பெருக்கி நாள்தோறும் பய பக்தியுடன் வழிபட்டு வந்தாள். ஒரு நாள் அறுகு கிடைக்கவில்லை. பாங்கியர் வன்னி இலையைக் கொணர்ந்து கொடுத்தார்கள். கீர்த்தி அரை மனத்துடன் வன்னி இலை கொண்டு வழிபட்டு, அறுகில்லாமல் பூசித்தோமே என்ற மனக் குறையுடன் உண்ணாது உறங்கினாள்.

விநாயகர் அவளுடைய கனவில் தோன்றி, ''சீர்த்தியுடைய கீர்த்தியே! அறுகில்லையானாலும் வன்னியால் நீ வழிபட்டனை. இதோ பார் நீ இட்ட வன்னி என் சென்னியில் அழகு செய்கின்றது. நீ வருந்தற்க. நாளை முதல் உன் கணவன் உன்மீது அன்பு வைத்து ஆதரவு செய்வான். உன் மாற்றாளுக்கு வெப்பு நோய் உண்டாகும். உனக்கு ஓராண்டில் ஆணிமுத்தனைய ஆண்மகவு பிறக்கும். அவனுக்கு 'க்ஷிப்பிரப் பிரசாதன்' என்று பேர் சூட்டுவாய். உன் மாற்றாள் அம்மகனுக்கு நான்காம் ஆண்டில் நஞ்சிடுவாள். ஆயினும் உன் புதல்வன் நலம் பெறுவான்'' என்று கூறி அருள் புரிந்தார்.

கீர்த்தி கனவு தெளிந்து எழுந்தாள். கணேசருடைய கருணையைக் கருதி உள்ளம் உருகினாள். முன்போல் பிள்ளையாருக்கு வழிபாடு செய்தாள்.


மாற்றாளுக்கு ஆற்றொணா வெப்பு நோய் விளைந்தது. பிரபை பெருந்துயரம் அடைந்தாள். அதனால் அழகு குன்றினாள். விநாயகருடைய தண்ணருளினால் கீர்த்தி திருமகளைப் போல் விளங்கினாள். பிரிய விரதன் இளையாளை வெறுத்து மூத்தாளை விரும்பி அவளுடன் வாழ்ந்தான். அவள் கருவுற்று நல்ல நாளில் ஒரு மகனை ஈன்றாள். க்ஷிப்பிரப்பிரசாதன் என்று பெயர் சூட்டினாள். அவன் வளர் மதிபோல் வளர்ந்தான்.


இளையாள் பொறாமையால் புழுங்கினாள். இவனைக் கொன்றொழிப்போம் என்று திட்டமிட்டாள். உணவில் நஞ்சு கலந்து கொடுத்து விட்டாள். நஞ்சு

தலைக்கேறியவுடனே க்ஷிப்பிரப்பிரசாதன் மயங்கி விழுந்து விட்டான். பிரியவிரதன் என்ன என்னவோ பரிகாரங்கள் செய்தும் பயன் பெறவில்லை.

கீர்த்தி கிருத்சமத முனிவரிடம் தன் மகனை எடுத்துப் போய், அவரைப் பணிந்து, ''அருள் நிதியே! என் மகனைக் காப்பாற்றும்'' என்று வேண்டினாள். அம் முனிவர் கீர்த்தியைப் பார்த்து ''அம்மா! அழாதே. அன்றொரு நாள் நீ விநாயகரை வன்னி இலையால் வழிபட்டாயன்றோ? அப்புண்ணியப் பயனை உன் மகன் கையில் நீர் விட்டுத் தத்தம் செய். உன் மகன் நஞ்சு நீங்கி நலம் பெற்று எழுவான்'' என்றார். அப்படியே அவள் செய்தாள். க்ஷிப்பிர பிரசாதன் உணர்வு பெற்று எழுந்தான். க்ஷிப்பிரப் பிரசாதன் தாய் தந்தையரையும் கிருத்சமத முனிவரையும் பணிந்தான்.

அதனால் எல்லோரும் வன்னிப் பத்திரத்தின் மகிமையை உணர்ந்தார்கள். வன்னி என்று வாக்கினால் சொன்னாலும் பிறவிகள் தோறும் செய்த தீவினைகள் தீயில் பட்ட பஞ்சு போல் எரிந்தொழியும். ஐந்து அக்கினிகளுக்கு இடையில் நின்று செய்த தவப் பயனும், வேள்விகள் செய்து அடையும் புண்ணியமும் ஒரு வன்னி இலையால் விநாயகரை வழி பட்டவருக்கு உண்டாகும். உன்னிய நலன்கள் யாவும் வன்னியர்ச்சனையால் உண்டாகும்.





மெர்க்குரி கிரகம்


விகேயெம்



வான சாஸ்திரம் நம் பாரதத்தின் மிகப் புராதனமான கலை. இன்றைய நவீன விண்வெளி ஆராய்ச்சிகளுக்கெல்லாம் முற்பட்டது நம்முடைய வான சாஸ்திரம். வானத்தையும் அதில் காணும் நட்சத்திரங்களை அளக்கவும் ஆராயவும் இன்று எத்தனையோ நவீன சாதனங்கள் உள்ளன. எவ்விதமான சாதனங்களுமின்றியே வானத்து நட்சத்திரங்களைக் கண்டு கணக்கிட்டுக் கால நிலைகளையும் பருவ மாறுபாடுகளையும் கணித்துச் சொன்னார்கள், நம்முடைய முன்னோர்கள். வான சாஸ்திரத்தில் வல்லவர்களாக விளங்கிய நாம்; கிரகங்களைக் கடவுளர்களாக உருவாக்கி வழிபட்டு வரும் நாம், அந்தக் கிரகங்களைப் பற்றி இன்றைய விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் பார்ப்போமே.

சூரியனால் ஈர்க்கப்பட்டு அதை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழன்று வரும் ஒன்பது நட்சத்திரங்களுக்குக் கிரகங்கள் என்று பெயர். சூரியனேகூட ஒரு நட்சத்திரம்தான். சூரியனோடு தொடர்புடையவைகளை ஆங்கிலத்தில் 'ஸோலார்' என்கிறார்கள். சூரியனையும் அதைச் சுற்றி வரும் நட்சத்திரங்களையும் 'சூரியக் குடும்பம்' — ஸோலார் ஸிஸ்டம் — என்கிறார்கள். சூரிய குடும்பத்தில் பூமியும் ஒரு கிரகம் (நட்சத்திரம்)தான். சூரிய குடும்பத்திலுள்ள உலகங்களில் பூமி ஒன்றில்தான் ஜீவராசிகள் (உயிர்) இருக்கின்றன. மற்ற கிரகங்களான மெர்க்குரி (புதன்), வீனஸ் (சுக்கிரன்), மார்ஸ் (செவ்வாய்), ஜுபிடர் (குரு — வியாழன்), சாடர்ன் (சனி), யுரானஸ், நெப்டியூன் (வருணன்) புளூடோ இவைகளில் என்ன இருக்கின்றன? வாழ்வதற்கு ஏற்ற வகையில் இவ்வுலகங்கள் உள்ளனவா? அங்குள்ள சீதோஷ்ண நிலை எப்படி? அவற்றின் அளவுகள் என்ன?

சூரியனுக்கு மிக அருகேயுள்ள கிரகம் **மெர்க்குரி**. இதை நாம் **புதன்** என்று அழைக்கிறோம். கிரேக்கர்கள் இதை ஹெர்மஸ் (Hermes) என்று அழைத்தார்கள். கிரேக்கக் கடவுளர்களின் தூதுவனுடைய பெயர் ஹெர்மஸ். இவன் சுலபமாகப் பிறர் கண்களில் பட மாட்டானாம். இரகசியச் செய்திகளைக் கொண்டு செல்லும் பணியாள் எல்லாருடைய பார்வையிலும் பட முடியுமா? அதைப் போலவே மெர்க்குரி கிரகத்தையும் சுலபமாகக் காண முடியாது. ஆகவேதான் ஹெர்மஸின் பெயரை இதற்குப் புராதன கிரேக்கர் வைத்தார்கள் போலும். ஹெர்மஸ் என்ற கிரேக்கப் பெயருக்கு அதே பொருளைத் தரும் ரோமானியப் பெயர் மெர்க்குரி.



(ஒவ்வொரு கிரகங்களின் அருகேயும் குறிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை; சூரியனிடமிருந்து அந்தக் கிரகத்தின் தூரம்— மில்லியன் மைல்களில்)

ரோமானியர்கள் புதன் கிரகத்தை அழைத்த அதே பெயர் நிலைத்து விட்டது.

விண்வெளிப் பயணம் ஒரு காலத்தில் மிகவும் சகஜமான ஒன்ருக ஆகும்போது மெர்க்குரிக்குப் போகும் பயணத்தைத்தான் கடைசியாக வைத்துக்கொள்ளுவார்கள். ஏனென்ருல் ஒன்பது கிரகங்களுக்குள் சூரியனுக்கு மிகவும் அருகே உள்ள கிரகம் மெர்க்குரிதான். மிகச் சிறிய கிரகமும்கூட இதுதான். (இதன் குறுக்களவு 3100 மைல்கள்.) மிக மிகச் சூடான, மிக மிகக் குளிர்ச்சியான, மிக மிக வேகமாக நகரக்கூடிய கிரகமும் இதுதான். இந்தக் கிரகம் சூரியனை ஒரு முறை சுற்றி வர 88 நாட்களே ஆகின்றன. ' விநாடிக்கு 35 மைல் வேகத்தில் பறக்கிறது இக்கிரகம். இந்த 88 நாட்களில் தன் இருசில் தன்னைத் தானேயும் ஒரே ஒரு தடவைதான் சுற்றிக்கொள்கிறது. இதனுல் மெர்க்குரியின் ஒரு பக்கம் எப்போதும் சூரியனைப் பார்த்தபடியேயும் மறு பாதி எப்போதும் சூரியனுக்கு எதிர்ப் பக்கத்திலும் இருக்கும். ஒரு பாதியில் எப்போதும் ஒளி, மறு பாதியில் எப்போதும் இருள் — நம் சந்திரனைப் போல். சூரிய ஒளி நிரந்தரமாகச் கட்டெரிக்கும் பகுதியில் ஈயமோ தகரமோ உருகும் அளவுக்கு வெப்ப நிலை உடையதாக இருக்கும். எழுநூறு டிகிரி ஃபாரன் ஹீட் என்று உத்தேசமாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். சூரியப் பாதையிலேயே மிக மிக உஷ்ணமான உலகம் இதுதான் — சூரியனைத் தவிர.


சூரிய ஒளி படாத இருள் பக்கத்திலோ இதற்கு நேர்மாருக மிக மிகக் குளிர்ச்சியாக இருக்கும். மற்ற கிரகங்கள் வெகு வேகமாகத் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுவதால் சூரிய ஒளி எல்லாப் பாகங்களையும் ஒரே நிலையில் உஷ்ணப்படுத்துகின்றன. தவிர மெர்க்குரி கிரகத்தின் மேல் பரப்பில் கனமாக ஒருவித வாயு மெல்லிய துணியைப்போல மூடிக் கொண்டிருக்கிறது. வெளிச்சப் பகுதியிலிருந்து உஷ்ணம் இருள் பகுதிக்குச் செல்வதற்கு இந்த . வாயு மூட்டம் தடையாக இருக்கிறது. இருள் பகுதியின் வெப்ப நிலை உறை நிலைக்கு மிக மிகக் கீழே (மைனஸ்) — 459.7 டிகிரி ஃபாரன் ஹீட். இதில் வாயுக்களும் உறைந்து விடும். இந்தக் கிரகத்தில் உயிருள்ள எந்த ஜீவராசியும் இருக்க முடியாது. காரணம், சூரியனிடமிருந்து மூன்று கோடியே அறுபது லட்சம் மைல்களில் இந்தக் கிரகம் இருப்பது தான்.

விண்வெளி ஆராய்ச்சியாளர்கள், இந்தக் கிரகத்திலும் இறங்கலாம் என்பதற்கு ஒரே நம்பிக்கை, வெளிச்சப் பகுதியின் ஓரங்கள் எப்போதும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. சுழற்சியிலும் ஆகர்ஷணத்திலும் இக்கிரகம் இப்படியும் அப்படியுமாக அசைந்தபடி நிலையற்ற தன்மையில் இருக்கிறது..... பட்டை கட்டினுற் போன்று ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் ஒளியும் இருளும் மாறுதலுக்கு உட்படுகின்றன. இங்கு வெப்ப நிலையும் மாறுபடுகிறது. ஆகவே விண்வெளிப் பயணிகள் போய் இறங்குவதற்கு ஏற்ற பகுதிகள் இவைதாம்.

நம்முடைய சந்திரன் சூரிய ஒளியை எப்படிப் பிரதிபலிக்கிறதோ, அதே நிலையில்தான் மெர்க்குரியும்



மெர்க்குரியில் காற்றோ நீரோ கிடையாது. இங்கு நீங்கள் காண்பது மெர்க்குரியின் மேற் பரப்பு-வடதுருவத்திற்கு அருகில் ஓர் இடம். மிகப் பெரிய வெண்மை ஒளி தான் சூரியன்.



வாடா மலர்

எந்த இல்லத்தில் அவனை குரலைவிட அவள் குரல் ஓங்கி இருக்கிறதோ, அந்த இல்லத்துக்கும் இன்பத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. — லா அதி

தரும சங்கடம் என்றால் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கடமைகளில் எதனைச் செய்வது என்று நிச்சயமாக விளங்காமல் திகைக்கும் நிலை. இந்த நிலைமை யோக்கியர்களுக்கு அடிக்கடி ஏற்படும். — ராஜாஜி

சூரிய ஒளியைப் பிரதிபலிக்கிறது. ஆகவே சந்திரனின் பரப்பைப் போலவே தான் இதன் பரப்பும் ஒழுங்கற்ற கூரான மலைகளாலும், சமவெளிகளில் எரிமலை வாய் போன்ற பள்ளங்களுமாக இருக்கும் என்று வானசாஸ்திரிகள் நம்புகிறார்கள். மெர்க்குரியிலிருந்து பார்த்தால் சூரியன் மிகப் பெரிய நெருப்புக் கோளமாகத் தோன்றும்.

ஒலி ஏற்படக்கூடிய சூழல் இல்லாததால் இங்கு நிசப்தமே நிலவும். இந்தக் கிரகத்தைப் பூமியிலிருந்து தூரதரிசினியின் மூலமாகக்கூடச் சுலபமாகக் காண முடியாது. அடி வானத்துக்கு மேலாக அதிக உயரத்தில் இது தோன்றுவதே இல்லை. காலையிலும் மாலையிலும் மட்டுமே இது தெரியும். மற்ற வேளைகளில் சூரிய ஒளியின் ஜ்வலிப்பிலோ அல்லது அடிவானத்துக்குக் கீழேயோ மறைந்து போகும்.

புதன் கிரகமான மெர்க்குரியை வான சாஸ்திரிகள் எப்போது எவ்வாறு கண்டு பிடித்தார்கள் ?

தூரதரிசினி (டெலஸ்கோப்) கண்டு பிடிக்கப்பட்ட பிறகு நமது சந்திரனைப் போல் ஒரு கிரகம் சூரியனின் அருகில் இருப்பதைக் கண்டார்கள். அளவிலும் அது நமது சந்திரனைப் போலவே இருந்தது. ஆனால் அதன் மேற்பரப்பு எப்படி இருந்தது? பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல பிரிட்டிஷ் வான சாஸ்திரியான சர் வில்லியம் ஹெர்ஸ்செல் என்பவர் முதன் முதலில் மெர்க்குரியை நுணுக்கமாக ஆராய்ந்தார். ஆனால் அவருக்கும் அதன் மேற்பரப்பைப் பற்றி விளக்கம் கொடுக்கத் தெரியவில்லை. ஜெர்மனியைச் சேர்ந்த வான சாஸ்திரியான ஸ்குரோட்டர் (Schroter) தாம், மெர்க்குரி கிரகத்தில் பதினொரு மைல்கள் உயரமுள்ள மலையைக் கண்டதாகக் கூறினார். ஆனால் யாரும் இதை உறுதிப்படுத்தவில்லை. 1860ல் பிரபல பிரஞ்சு வான சாஸ்திரியான லெவரியர் மெர்க்குரியின் சூரியச் சுற்றுப் பாதை மற்ற கிரகங்களுடையதைப் போல் சரியான வட்டப் பாதையில் அமையவில்லை என்பதை அறிந்து கூறினார். இந்தக் கிரகத்தின் இயக்கம் வேறொரு கிரகத்தின் இயக்கத்தினால் பாதிக்கப்படுவதாகக் கூறிய லெவரியர் அந்தக் கிரகத்துக்கு வல்கன் என்று பெயரிட்டார். 1878ல் ஏற்பட்ட ஒரு பூரண கிரகத்தின் போது அமெரிக்காவில் வாட்ஸன், ஸ்விப்ட் என்ற இரு வான சாஸ்திரிகள் வல்கனைத் தேடித் தேடிப் பார்த்தார்கள். ஆனால் அப்படி ஒரு கிரகம் இருந்தாலல்லவா தெரிவதற்கு? லெவரியரின் கூற்றுப்படி அந்தப் புதிய வல்கன் கிரகம் வேறு யாருக்கும் தென்படவில்லை. பிற்காலத்தில் ஐன்ஸ்டீனின் 'காலம் இடம் பொதுத் தொடர்பு' தத்துவத்தின்படி இந்தப் புதிய வல்கன் கிரகத்தைப் பற்றிய செய்தியே அழிக்கப்பட்டு விட்டது.

மெர்க்குரியின் இயக்கம் பற்றிய துல்லியமான கணக்கீடுகளை அளித்தவர் மிலான் நகரைச் சேர்ந்த ஷியா பாரெல்லி என்பவர் (1881—1889) மெர்க்குரியின் ஆண்டுக்கு 88 நாட்கள் என்பதைக் கணக்கிட்டவரும் இவர் தான். இந்தக் கிரகத்தின் ஒரு பக்கம் மிக மிக வெப்பமாகவும் மறு பக்கம் மிக மிகக் குளிராகவும் இருக்கும் என்று அறிந்து கூறியவர் ஷியா பாரெல்லி தான். இவர் இக் கிரகத்தை நல்ல நண்பகலில் ஆராய்ந்தார்.

இவருக்குப் பிறகு இன்னும் பலர் எத்தனையோ ஆராய்ச்சிகள் செய்து மெர்க்குரியின் தன்மை பற்றி விசேஷத் தகவல்களை அளித்திருக்கிறார்கள். வருங் காலத்திய விண்வெளிச் ஆராய்ச்சிகள் அதன் மேற் பரப்பு பற்றியும் அங்குள்ள எரிமலைவாய்ப் பள்ளங்கள் பற்றியும் புதிய செய்திகளை நமக்குத் தரலாம்.

மந்திரக் கம்பளம்

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே விசித்திரபுரி என்று ஒரு நாடு இருந்தது. இந்த விசித்திரபுரியை மந்தஹாச மகாராஜா என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். அவர் ரொம்ப மந்த புத்தியுள்ளவர்; ஆனால் நல்லவர். ராணியின் பெயர் ரத்னாவதி. ராணியும் ராஜாவும் சௌக்கியமாகச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இது கொஞ்ச காலம்தான்: அவர்களை மெள்ள மெள்ள ஏக்கம் வாட்டலாயிற்று. ஏன் ?

விசித்திரபுரிக்கு அடுத்த வாரிசாக ஓர் இளவரசன் இன்னும் தோன்றாததுதான். மன்னருக்குக் குழந்தைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். ராணிக்கோ இன்னும் குழந்தையே பிறக்கவில்லை. 'ஒரு குழந்தையைக் கொஞ்சி மகிழக் கொடுத்து வைக்கவில்லையே? தாயாகவில்லையே' என்ற ஏக்கம் பெருகலாயிற்று ரத்னாவுக்கு.



மன்னர் மந்தஹாசரின் நாட்டை அடுத்திருந்த கானகத்தில் பல மலைக்குகைகள் இருந்தன. அதில் காலமெல்லாம் கண் மூடிக் கடவுளை நினைத்துத் தவம் புரியும் முனிவர்கள் பலர் இருந்தார்கள். இவர்களிடம் போய் ஆசி பெற்று வந்தால் தமக்கு ஒரு மகன் பிறக்க அவர்கள் அருள் புரிவார்கள் என்று நம்பினார் மன்னர். ஆனால் ராணியோ இந்த எண்ணத்துக்கே எதிரியாக இருந்தாள்.



வாண்டு மாமா

அவனுக்குச் சாமியார்களைக் கண்டாலே பிடிக்காது. அவர்களால் சின்ன வயதில் ரொம்பவும் அவதிப்பட்டவள் ராணி. அதனால் தான் ஜடைமுடி தரித்த சாமியார்களைக் கண்டாலே அவள் ஓடி ஒளிவாள். முகம் சுளிப்பாள். ஆத்திரப்படுவாள். இதெல்லாம் மன்னருக்குத் தெரியும். ஆகவே அவர் தம் எண்ணத்தைக் கைவிட்டு விட்டார். ராணி ரத்னவுக்குக் கட்டுப்பட்டவர் மந்தஹாஸர். நாட்டையேகூட ராணிதான் நிர்வகித்து வந்தாள். அவள் விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்யமாட்டார். ராணிக்கு அடங்கிய பொம்மை ராஜா அவர்.

தம் காலத்துக்குப் பிறகு விசித்திரபுரி வேற்று நாட்டானின் வசமாகி விடுமே என்று தமக்குப் பிள்ளையில்லாக் குறையை எண்ணியபடி நான் மாடக் கூடலின் மேன்மாடத்தில் அமர்ந்திருந்த மந்தஹாச மகாராஜா அரைத் தூக்கத்தில் இருந்தார். அப்போது அவர் மனத் திரையிலே ரத்னவதி தம் மனைவியாக வாய்த்த அந்த நிகழ்ச்சி தோன்றலாயிற்று.

இளவரசராக இருக்கும்போதே மந்தஹாசர் மந்தமாகத்தான் இருப்பார். வீர விளையாட்டுக்களிலோ வேட்டையாடுவதிலோ நாட்டம் கிடையாது. ஒரு சமயம் பெரிய ராஜா தம் மகனைக் கட்டாயப்படுத்தி வேட்டைக்கு அனுப்பினார். காட்டுக்குப் போனதும் தம்மோடு வந்தவர்களுக்குப் போக்குக் காட்டிவிட்டுத் தனியாகப் பிரிந்து போனான் மந்தஹாசன். ‘முயலையும் மானையும் புலியையும் துரத்திக் கொண்டு ஓடுவதாவது? கானகத்து நிழலில் கண் மூடிப் படுத்தால் எவ்வளவு சுகமாகத் தூக்கம் வரும்? இதை அனுபவிக்காமல் குதிரையை விரட்டிக் கொண்டு வேட்டையாட அலைவது முட்டாள்தனம்’ என்று ஒரு குகைக்குள் புகுந்து வசதியாகப் படுத்துக் கொண்டான் இளவரசன் மந்தஹாஸன். குளுகுளு வென்ற காற்று இதமாக இருந்தது. இனிமையான தூக்கமும் அவனைத் தழுவிக் கொண்டது.

அந்தக் குகைக்குள் ஒரு பெரிய மிருகம் வசித்து வந்தது. நீண்ட வால், பயங்கரமான முகம், பெரிய வாய், அனல் கக்கும் அதன் மூச்சுக் காற்றுப் பட்டால் அத்தனையும் சாம்பல். இளவரசன் மந்தஹாசனின் குறட்டைச் சத்தம் குகைக்குள் தூங்கிக் கொண்டிருந்த பயங்கர மிருகத்தை எழுப்பிவிட்டது. கோபத்துடன் வாலைச் சுழற்றித் தரையில் அடித்தபடி வாயிலிருந்து தீ ஜ்வாலை கக்க அம்மிருகம் குகையின் வாசலுக்கு வந்தது. அப்போதும் இளவரசன் எழுந்திருக்கவில்லை. தன் கர்ஜனையைக் கேட்டுக் கலங்காமல் கண் துயிலும் மனிதனைக் கண்ட மிருகத்துக்கு வியப்பான வியப்பு. சட்டிகள் போன்ற செதில்களையுடைய தன் வாலினால் தூங்கும் இளவரசனின் காதருகே கிசுகிசு மூட்டியது மிருகம்.

தன்னுடன் வேட்டையாட வந்தவர்கள்தான் தன் தூக்கத்தைக் கலைக்க ஏதோ குறும்பு செய்வதாக எண்ணிய இளவரசன் ‘‘என்னப்பா! இதெல்லாம் விளையாட்டு?’’ என்று கண்களைத் திறக்காமலேயே கையால் மிருகத்தின் முன் வாலை ஒதுக்கித் தள்ளினான்.



அந்தக் காலத்து அந்தப் பொல்லாத மிருகம் பேசவும் கூடச் செய்தது. ''எதை விளையாட்டு என்கிறாய்? இதையா? நன்றாகக் கண்ணைத் திறந்து பார்'' என்று அவன் முகத்துக்கு நேரே தன் நெருப்பு மூச்சை ஊதிற்று மிருகம்.

ஆனால் மந்தஹாசன் இப்போதும் கண்களைத் திறக்கவில்லை. தூக்கத்தின் இனிமையை இழக்க விரும்பவில்லை அவன். ''கொஞ்ச நேரம் நிம்மதியாகத் தூங்க விடுங்கப்பா. தொந்தரவு செய்யாதீர்கள்'' என்று கூறியபடி மறுபுறம் திரும்பி வசதியாக முடங்கிக் கொண்டான். தன்னை இலட்சியமே செய்யாத மனிதனைக் கண்ட அந்த மிருகத்தின் முகம் சிவந்தது.


''என்னை முத்தமிடு!'' என்று கத்திற்று அந்த டிராகன் மிருகம். எத்தனையோ வீராதி வீரர்களை யெல்லாம் அது இப்படிக் கேட்டு மிருக்கிறது. அவர்கள் அதை முத்தமிடச் சம்மதிக்காததினால் அதற்கு இரையாகி மாண்டு போயிருக்கிறார்கள். ஆனால் கண்களையே திறக்கர்மல் தூக்கத்தில் சொக்கிக் கிடக்கும் மந்தஹாசனுக்கு இதெல்லாம் எதுவுமே தெரியாது. தன் முன்னால் ஒரு பயங்கர மிருகம் உட்கார்ந்திருப்பதைக் கூட அவன் புரிந்து கொள்ளவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தால்தானே?

''என்னை முத்தமிடு'' என்ற குரல் கொஞ்சம் பெண் குரலைப் போலிருந்ததினால் இளவரசனும் கொஞ்சம் அசைந்து கொடுத்தான். அப்போதும் கண்களைத் திறக்கவில்லை. கண் மூடிய படியே ''முத்தம்தானே...? அதைக் கொடுத்து விட்டால் ஆளை நிம்மதியாகத் தூங்க விடுவாயல்லவா?''என்று கேட்டபடியே உதட்டைக் குவித்துத் தன் முகத்தருகே இருந்த மிருகத்துக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டுத் தன் தூக்கத்னைதத் தொடரலானான். ஆனால்...?

இளவரசன் அந்தக் கொடிய மிருகத்துக்கு முத்தம் கொடுத்ததும் நடந்தது என்ன தெரியுமா? அழகே வடிவான ஒரு பெண்ணாக மாறியது அந்த மிருகம். ஒரு ராஜகுமாரிதான் ஒரு மந்திரவாதியினால் கொடிய மிருகமாக்கப்பட்டிருந்தாள். 'மிருகமாக இருக்கும் உன்னை யாராவது துணிச்சலுடன் முத்தமிட்டால் அவனுக்கு உன்னுடைய பழைய உருவம் திரும்பி விடும்' என்று தன் மந்திர சக்திக்கு ஒரு மாற்றும் தெரிவித்திருந்தான் அவன். கோர ரூபமுடைய அந்த மிருகத்தைப் பார்த்தவர்கள் யார்தான் அவள் கேட்கும் முத்தத்தைக் கொடுப்பார்கள்? ஆனால் இன்றோ மந்த ஹாஸன் தூக்க இன்பத்தால் இமைகளைத் திறக்காமலேயே அவள் கேட்டதைக் கொடுத்ததும் ராஜகுமாரி, தன்னுடைய சுய உருவத்தைப் பெற்று விட்டாள்.

''வீராதி வீரரே! என் அன்பரே! என் மணாளா!'' என்று இனிய குரலால் கூப்பிட்டுத் தொட்டு எழுப்பினாள் இளவரசி. ''உங்களுக்காக நான் இத்தனை காலமாக இந்தக் கொடிய உருவிலே காத்திருந்தேனே. இனி நான் உங்களுடையவள். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்றாள்.

அரைத் தூக்கத்திலிருந்த இளவரசன் மந்தஹாசன் இனிய குரல் கேட்டு அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். கண்களை அகலத் திறந்து எதிரில் இருக்கும் அழகியைக் கண்டான். நல்ல வேளை! சற்று முன்பு வரையில் அவள் எப்படி இருந்தாள் என்பதை அவன் இப்படிக் கண் திறந்து பார்த்திருப்பானா




னல் குதிரையையும் மிஞ்சும் வேகத்தில் ஓடியிருப்பான். அவன் இப்போது பார்த்துக் கொண்டிருப்பது ஓர் அழகிய பெண்ணை. அதுவும் அவள் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி கெஞ்சுகின்ற நிலையில். மந்தஹாசன் எப்போதுமே எதைப் பற்றியும் அதிகமாக ஆலோசிக்க மாட்டான். இப்போதும் அப்படித்தான். அந்தப் பெண் தன் பெயர் ரத்தினவதி என்றாள். அவளைத் தன் குதிரையின் மீது ஏற்றிக் கொண்டு விசித்திரபுரிக்குத் திரும்பினான். விரைவிலேயே ரத்தினவதி மந்தஹாஸனின் மனைவியானாள். அவனைவிட அவள் அறிவாளியாகவும் திறமைசாலியாகவும் இருந்தாள். ஆகவே மந்தஹாஸன் சிங்காதனம் ஏறியதும் நாட்டு நிர்வாகத்தை ரத்தினவதியிடமே ஒப்புவித்து விட்டுப் பெயருக்கு மட்டும் மகாராஜாவாக வாழ்ந்து வந்தார் மந்தஹாஸர். மந்திரவாதிகளையும் முனிவர்களையும் கண்டாலே ரத்தினவதிக்கு ஏன் பிடிக்காதென்று இப்போது புரிகிறதில்லையா?

ராணி ரத்தினவதிக்குப் பயந்து கொண்டு முனிவர்களிடம் போகாதிருந்தாலும் அரண்மனையில் இருந்தபடியே அவர்களை உளமாற நினைத்து வேண்டிக் கொண்டார் மன்னர் மந்தஹாசர். அவரது முன்னோர்களெல்லாம் யோகிகளை மதித்து மரியாதை செய்து வந்திருக்கிறார்களாம். மந்தஹாசருக்கும் அவர்களிடம் மரியாதை உண்டு. ராணிக்குப் பயந்துதான் அவர்களை அணுகாதிருந்தார். இவருடைய மானசீக வேண்டுதலினால்தானோ என்னவோ, ரத்தினவதிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மன்னரின் மகிழ்ச்சிக்கும் நாட்டு மக்களின் ஆனந்தத்துக்கும்



முதல் பையன்: நாங்கு எத்தனை காலுன்னு தெரியுமாடா?
இரண்டாம் பையன்: இது தெரியாதா? நாலு காலு!
முதல் பையன்: அதுதான் இல்லே. நாய்க்கு ஒரே ஒரு கால் தான் இதோ பாரு நா'ய்!

- எம். எம். ராஜு




மகள்: அம்மா! நம்ம வீட்டு ஆடு இங்கிலீஷ் பேசுதும்மா!
தாய்: என்னடி உளறுகிறாய்? ஆடாவது இங்கிலீஷ் பேசறதாவது...?
மகள்: ஆமாம்மா! அடிக்கடி 'மே மே'ன்னு மாதத்தின் பேரைச் சொல்றது பார்!

- எம். எம். ராஜு

முதல்வன்: எனக்குச் சூதாட்டத் தெரியாது, புகை பிடிக்கத் தெரியாது, திருடத் தெரியாது.
இரண்டாமவன்: உனக்கு வேறு என்ன தான் தெரியும்?
முதல்வன்: பொய் சொல்ல மட்டும் தெரியும்.

- ஆர். கே. நிஜாம்



சிரிக்கச் சிரிக்க

எல்லையே இல்லை. ராணியும் பூரித்துப் போனாள். குழந்தை பிறந்து பத்தாவது நாள் தொட்டிலில் இட்டுப் பெயர் சூட்டுவதை விழாவாகக் கொண்டாடுவது விசித்திரபுரியின் வழக்கம். அன்று நல்லோர் பெரியோர் எல்லோரையும் அழைப்பார்கள். எல்லோருடைய ஆசியையும் பெறுவதற்காக ஏற்பட்ட விழா அது. அரச குமாரனுக்கான இந்த வைபவம் எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்? ஏகத் தடபுடலாக ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன.


பிறந்த குழந்தையை மங்கல நீராட்டினார்கள். மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது மரகதக் கற்களினால் இழைத்த தொட்டில். அதில் பட்டாடை அணிந்தபடி பஞ்சு மெத்தையில் கண் மூடிக் கிடந்தான் இளவரசன். நாட்டு மக்களெல்லாம் வந்து வாழ்த்தினார்கள். ஆனால் மன்னர் யாரை எதிர்பார்த்தாரோ, அவர்கள் யாருமே வரவில்லை.

யார் அவர்கள்?

மலைக் குகைகளில் தவம் புரியும் யோகிகளும் துறவிகளும் முனிவர்களும்தான். அவர்கள் வந்துதான் குழந்தைக்குப் பெயர் வைப்பார்கள். ஆனால் இதுவரையில் யாரையுமே காணுமே? மந்திரியை அழைத்து விசாரித்தார். ''தவசிகளுக்கும் துறவிகளுக்கும் யோகிகளுக்கும் இன்றைய நல்ல காரியத்தை அறிவித்து அழைப்பு அனுப்பவில்லையா?''

''மகாராணி அவர்கள் அவர்களை அழைக்க வேண்டாம் என்று கூறிவிட்டார்கள்'' என்றார் மந்திரி.


மந்தஹாச மகாராஜாவுக்குக் கோபம் வந்தது. ஆனால் மகாராணியிடம்



வீட்டுக்காரர்: இரண்டு மாத வாடகை பாக்கி. அதைக் கொடுக்காமல் இங்கிருந்து ஒரு சாமானும் வெளியே போகக்கூடாது.

குடியிருப்பவர்: நீங்கள் தேவலை. இதற்கு முன்பு குடியிருந்த வீட்டில் அவர் வாடகை பாக்கிக்காகச் சாமான்களையே வீதியில் எறிந்து விட்டார்!

- ஆர். கே. நிஜாம்



''நான் மந்திரியானால் எல்லாம் செய்வேன். ஆனால் ஒன்று மட்டும் செய்ய மாட்டேன்.''

''என்னது....''


''ராஜினாமா!''

- வி. அசோக்குமார்

பேரன்: ஏன் பாட்டி, நான் தப்புச் செய்தால் அம்மா என்னைக் கழுதை என்று திட்டுகிறாளே; குட்டிக் கழுதை தவறு செய்தால் அம்மாக் கழுதை அதை எப்படித் திட்டும்?

பாட்டி: 'அட அசட்டு மனுஷா' என்று திட்டுமோ என்னவோ?


- போத்தனூர் சாரதி



ஆசிரியர்: ஏண்டா மக்கு! உலகிலேயே பெரிய மலை எது என்று கேட்டால் பழனிமலை என்கிறாயே. இமயமலைதான் பெரிதென்று தெரியாது?

பையன்: நீங்கள்தானே சார், கண்ணால் பார்க்காமல் எதையும் சொல்லக்கூடாது என்றீர்கள்? இமயமலையை நான் பார்த்ததில்லையே?

- போத்தனூர் சாரதி



சித்திரம் வரைந்தவர் சாமா
சிரிக்கப் பண்ணுபவர் பலர்

அதைக் காட்ட முடியுமா? அருகிலிருந்த அவளிடம் ''எங்கள் வமிசத்தில் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவர்களை மறக்கவே மாட்டோம். நீ ஏன் இப்படி அவர்களைப் பகைத்துக் கொள்கிறாய்?'' என்று பக்குவமாகக் கேட்டார்.

''உங்களிடம்தான் நான் முன்பே கண்டிப்பாகக்கூறியிருக்கிறேனே, இந்தச் சாமியார்கள், மந்திரவாதிகள், யோகிகள் யாருமே நம் நாட்டுக்குள் வரக் கூடாது. நம் இளவரசனையும் அவர்களைப் பற்றிய எண்ணமே இல்லாதபடி வளர்க்கப் போகிறேன்'' என்றாள் ராணி ரத்தினவதி கடுப்புடன்.

''நம் குடும்பத்துக்கு நன்மை செய்யக்கூடியவர்கள் அவர்களெல்லாம். நீ நினைப்பதுபோல்...'' என்று ஏதோ கூற முற்பட்ட அரசரை இடைமறித்தாள் மகாராணி.

''இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடலாம். நம் குழந்தைக்கு நீங்களே பெயரிடுங்கள்'' என்று உத்தரவிட்டாள்.

அதற்கு மேல் அவரால் வாதாட முடியாது. அவளுக்கு அடங்கியவர் அவர். ஆகவே பெருமூச்சுடன் எழுந்திருந்தார். மலையடிவாரத்திலிருந்தும் குகைகளிலிருந்து வந்து கூடப் போகும் தவ முனிவர்களையும் யோகிகளையும் வரவேற்று உபசரித்து விருந்து கொடுக்க ஏற்பாடு செய்து ஏராளமான தலைவாழை இலைகள் போடப்பட்டிருந்தன. வெறிச்சோடிக் கிடந்த அந்தக் கூடத்தைப் பார்த்து அவர் மனம் அழுதது. மகனுக்குக் **கீர்த்தி வர்மன்** என்று பெயர் சூட்டித் திலகமிடும்போது 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் திடீரென்று ஊழிக் காற்றோ என்னும்படியாக ஒரு சத்தம் உண்டாயிற்று. 'ஊ ஊ' என்று காற்றும் வீசியது. கூடியிருந்தோர் பயத்தினாலும் காற்றின் வேகத்தினாலும் கண்களை மூடிக் கொண்டார்கள். சட்டென்று காற்றும் ஒலியும் நின்றன. கண் திறந்து பார்த்தபோது அந்தக் கூடத்தில் பரிமாறப்பட்டிருந்த அத்தனை இலைகளின் முன்னாலும் முனிவர்களும் யோகிகளும் மந்திர தந்திரங்களில் வல்லவர்களும் அமர்ந்திருப்பதைக் கண்டார். மன்னர் மந்தஹாஸர். அவர் உள்ளம் நிறைந்தது. முகத்தில் மந்தஹாஸம் குடிகொண்டது. ராணியோ முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கடுகடுப்புடன்.

மன்னரின் மானசீகமான வேண்டுதலை ஏற்று அவர்கள் வருகை தந்தார்கள். வந்தவர்களை விரட்ட முடியுமா ராணியால்? மன்னரும் மற்றவர்களும் அகமும் முகமும் மலர அவர்களுக்கு அமுது படைத்து அடிபணிந்து வணங்கினார்கள். விருந்துண்ட பின் வந்திருந்த தவயோகிகளும் பெரியோர்களும் குழந்தையை ஆசீர்வதித்தார்கள். ஒரு யோகி குழந்தைக்கு ஒரு பட்டுப் பையைப் பரிசாகக் கொடுத்தார். அதில் உள்ள தங்க நாணயங்கள் எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டேயிருக்கும். இன்னொருவர் ஒரு தப்படியில் ஒன்பது காத தூரத்தைக் கடக்கும் பாதுகையைப் பரிசாக அளித்தார். தலையில் அணிந்து கொண்டால் மற்றவர்கள் கண்களுக்குத் தெரியாமல், மறைந்து உலாவக் கூடிய மந்திரக் குல்லாயை ஒரு முனிவர் அளித்தார். விரும்பியதைக் கொடுக்கும் குளிகையைக் கொடுத்தார் வேறொருவர். விரித்துப் போட்டு அதன்மீது அமர்ந்து கொண்டு எங்கு போக வேண்டுமென்று நினைத்தாலும் அங்கு பறந்து செல்லும் மந்திரக் கம்பளத்தை ஒரு தவயோகி தந்தார். என்றும் இளமையோடு குன்றாத அழகுடன் விளங்கவும் மகா வீரனாகத் திகழவும், சகல சம்பத்துக்களுடன் வாழவும் ஆசீர்வதிக்கப்பட்டான் கீர்த்தி வர்மன். கடைசியாக ஒரு தொண்டு கிழவர் தொட்டிலின் அருகே வந்து தமது நடுங்கும் கரங்களால் குழந்தையின் தலையைத் தொட்டு வருடி, ''குழந்தாய்! நீ எல்லாரையும் விட அதிக புத்திசாலியாக விளங்குவாய்'' என்று ஆசீர்வதித்தார். எப்படி மாயமாகக் காற்று ரூபத்தில் வந்தார்களோ, அப்படியே மாயமாக மறைந்தும் போனார்கள் அத்தனை பேரும்.

இத்தனை நேரமும் சிலையாகச் செய்வதறியாது உட்கார்ந்திருந்தாள் ராணி. குழந்தை பசியால் சிணுங்கினான். தன் உணர்வடைந்தவள் ஓடிப் போய் அவனை அள்ளி அணைத்துக் கொண்டாள். வேறொரு தாயாக இருந்தால் இத்தனை பெரியோர்களின் ஆசிகளையும் அன்பளிப்பையும் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்து போயிருப்பாள். ஆனால் ரத்தினவதியோ யோகீசுவரர் அளித்த மந்திரத் தலைப்பாகை, பை, பாதரட்சை, கம்பளம், குளிகை, வாள் எல்லாவற்றையும் அப்படியே மூட்டையாகக் கட்டினாள். அரண்மனையின் வடக்குக் கோடியில் உள்ள ஓர் ஒதுக்குப்புறமான உப்பரிகையின் உச்சாணியில் ஓர் அறை உண்டு. குப்பை கூளங்களைக் கொண்டு போய்ப் போடுவதுபோல் இவைகளை யெல்லாம் அந்த அறையில் கொண்டு போய்ப் போட்டு அதன் கதவைப் பூட்டிக் கொண்டு வரும்படி உத்தரவிட்டாள். **(தொடரும்)**

மூத்தார் சொல் கேள்!

அரி இல. தமிழடியான்

பிறந்து சில திங்களான
  'பிச்சி' என்ற மீனுமே
பறந்து, நீரின் மேற்பரப்பில்
  பாய்ந்து ஆட்டம் போட்டது!
ஓடிவந்த 'அயிரை' யெல்லாம்
  ஒன்றாய்த் தலை யாட்டவே,
கூடியெல்லாம் குதித்து மிகக்
  கும்மாளமே போட்டன!

பார்த்துவிட்ட 'ஆரா' என்னும்
  பழுத்த தாத்தா மீனுமே
கூர்த்த நல்ல அனுபவத்தால்
  குஞ்சுகளை நாடியே,
''அப்பா, பிச்சி! அறியாமையால்
  ஆட்டம் ஏனோ போடுறீர்?
தப்பாய் நீரும் தண்ணீரின்மேல்
  தத்தும் போக்கில் ஆடுறீர்!

நம்மைக் கொல்ல என்றே உள்ள
  நமனும் கொக்கன் தன்னோடு,
செம்மையாய் மீன் கொத்தியானும்
  சிறகடித்தே பாய்ந்திடின்,
போகும் உயிர், நோகும் உடல்!
  புரிந்து கொண்டு இதனையே
போயொழிவீர் நீருக்குள்ளே!
  புரிக ஆங்கே வினையையே!''


என்று மேலும் இனியமொழி
  இவ்வாறாகக் கூறவே,
''நன்று நன்று தாத்தா உன்றன்
  தைரியம்போ!'' என்றுடன்
இழித்து அதைப் பழிக்காட்டி
  எல்லா மீனும் சேர்ந்துமே,
இழுத்து இங்கும் அங்குமாக
  ஏளனமே செய்தன!


குட்டுப்பட்ட 'ஆரா' மீனும்,
  ''குட்டிகளா, நீங்களும்
'பட்டால்தான் செட்டியாரின்
  பாடு தெரியும்' என்பதாய்ச்
சொல்லுகின்ற மொழியைப் போலச்
  சூடுபட்ட பிறகுதான்
கொள்ளுவீர் நான் கூறுவதை!
  குறும்பு தன்னைப் போக்குவீர்!''

என்று கூறி வாயைமூடி
  இருப்பதற்குள் ஆங்குமே,
கொன்று தின்னும் 'மீன்கொத்தி'யான்
  குறியை வைத்துப் பாயவே,
கண்டுகொண்ட தாத்தா மீனும்
  கடுகி உள்ளே ஓடிட,
முண்டமான 'பிச்சி' அதன்
  முன்னே சிக்க லானது!

மூழ்கி, நீரின் உள்ளே மற்ற
  மீன்களெல்லாம் ஓடியே
மூச்சுப் பேச்சு இல்லாமலே
  மூலையிலே ஒய்ந்திட;
கொஞ்சம் கொஞ்சமாக,வாழ்வு
  குறுகும் அந்தப் பொழ்துதான்
நெஞ்சந் தன்னில் 'ஆரா'சொன்ன
  நீதிதன்னைப் பிச்சியும்,

எண்ணி, எண்ணி ஏங்கியதாய்
  இவ்வுலகை விட்டுமே
விண்ணுலகந் தன்னை நோக்கி
  வீணே ஐயோ போனதே!
ஆதலினால் மூத்தோர் சொல்லும்
  அறிவுரைகள் தம்மையே,
நோதலின்றிக் கொண்டு நாமும்
  நூறு ஆண்டு வாழ்வோமே!




ஜெய் ஹனுமான் ௨
கதை: ரா. கணபதி
சித்திரம்: விஜு
ராவணனைக் கமுக்கட்டில் இடுக்கிய படியே மற்ற கடல்களுக்கும் சென்று, ஸ்நானமும் முடித்து அரண்மனைக்குத் திரும்பினான் வாலி
அங்கதா! நீ பார்த்து மகிழ இதோ ஒரு பத்துத்தலைப் பூச்சியைக் கொண்டு வந்திருக்கிறேன், பார...!
வாலியின் இரும்புப் பிடியினால் உடல் நொந்த ராவணன்....
அப்பா வாலி! உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். நீ இப்படிப்பட்ட பலசாலி என்று நான் நினைக்கவே இல்லை. தயவு செய்து என்னை விடுதலை கொடு.
இலங்கை மன்னா! இன்று முதல் நீயும் நானும் நண்பர்கள். உன் நாட்டுக்கு மகிழ்ச்சியோடு போவாயாக.
துந்துபியின் மகன் மாயாவி தன் தந்தையைக் கொன்றதற்குப் பழிவாங்க வருகிறான் கிஷ்கிந்தைக்கு..
ஆண்மை உள்ளவனானால் வெளியில் வந்து என்னுடன் போராடு பார்க்கலாம்.
பெயருக்கேற்றபடி மாய வித்தைகளில் வல்லவன் மாயாவி. வாலியை வெகு தூரம் இழுக்கடிக்கிறான்.
எங்கோ மறைந்து விட்டானே! இந்தப் பயல்! ஏ, மாயாவி! நீ எங்கு போனாலும் உன்னை விட மாட்டேன்.


மாயங்கள் புரிவதில் வல்லவனை மாயாவியுடன் போராட அண்ணா தனியே போயிருக்கிறார். நானும் போகிறேன். ஆஞ்சநேயா, நீ நாட்டைப் பார்த்துக் கொள்.
வாலியை வெகுநேரம் இழுக்கடித்த மாயாவி கடைசியில் ஒரு குகை பக்கே...
பலவானானால் இந்தக் குகைக்குள் வந்து என்னுடன் சண்டையிட்டு வெற்றி பெறப் பார்க்கலாம்..ம் ஹ..ஹா...
அண்ணா, குகைக்குள்ளே இன்னும் பல அரக்கர்கள் இருக்கலாம். அதோ ஆரவாரத்தைக் கேளுங்கள். தனியாக நீங்கள் இந்தக் குகைக்குள் போக வேண்டாம்.
ஹ...ஹ...ஹ..ஹா. ஹஹ்ஹா
நான் சுத்தவீரன். என்னைப் போருக்கழைத்த எதிரியைக் கொல்லாமல் திரும்ப மாட்டேன். நீ வேண்டுமானால் ஊருக்குப் போய் உன் உயிரைப் பாதுகாத்துக் கொள்.
சகோதர பாசமிக்க சுக்ரீவன் நீண்ட நெடுங்காலம் குகை வாசலிலேயே காத்திருந்தான் அண்ணனுக்காக.
ஒரு நாள்...
ஐயோ! குகைக்குள்ளிருந்து ரத்தம் வெள்ளமாக வருகிறதே. அண்ணனை அந்த மாயாவி கொன்றிருப்பானோ? இது அண்ணனின் சத்தம்தான். அந்த அரக்கர்கள் வெளியே வர முடியாதபடி அதோ அந்தப் பாறையை உருட்டித்தள்ளி இக்குகை வாசலை மூடி விடுகிறேன்

ஹாக்கியின் கதை

அவினாசி முருகேசன்

கிறிஸ்து பிறப்பதற்கு வெகு காலம் முன்பே, ஹாக்கி போன்ற விளையாட்டை ஐரோப்பிய, ஆசிய மக்கள் விளையாடி இருக்கின்றனர். ஆகவே, ஹாக்கியின் பிறப்பிடம் எது என்று சரியாகச் சொல்ல முடியவில்லை.

ஸ்காட்லாந்தில் இந்த விளையாட்டை 'ஷிண்டி' என்றும், அயர்லாந்தில், 'அர்லே' என்றும் அழைத்தனர்.

ஏதன்ஸ் நகரில் 1942ல் 'ஹாக்கி' விளையாட்டு சம்பந்தமாக ஒரு முக்கிய கண்டு பிடிப்பு நடந்தது. கி.மு.514—449 வருடங்களைச் சேர்ந்த தெமிஸ்டொகிள்ஸ் என்பவர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு சுவரில், இரண்டு வீரர்கள், நீண்டு வளைந்த கழிகளைக் கையில் ஏந்தியவாறு நின்றிருக்கின்றனர். அவர்கள் ஒரு பந்தை அடித்துத் தள்ளும் பாவனையில் இருக்கின்றனர்.

''ஹாக்குயட்' என்ற பிரஞ்சுச் சொல்லின் திரிபே, 'ஹாக்கி' என்று ஆயிற்று என்பார்கள். இதற்கு, 'வளைந்த கழிகளைக் கொண்டு விளையாடுவது' என்று பொருள். இங்கிலாந்திலிருந்துதான் இந்த விளையாட்டு பிரான்சுக்குப் பரவியது என்றும் சொல்வார்கள்.

ஆனால் இதை ஒரு கவர்ச்சிகரமான விளையாட்டாக மாற்றி, ஹாக்கியை உலக மத்தியில் பரப்பிய பங்கு இங்கிலாந்தையே சாரும்.

முதல் சர்வதேச ஹாக்கிப் போட்டி பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே 1907ல் நடந்தது. 1913ம் ஆண்டில் நடந்த போட்டியில் இங்கிலாந்திடம் ஜெர்மனி, பெல்ஜியம், டென்மார்க், ஹாலந்து, ஸ்பெயின், ஆஸ்திரியா, ஸ்விட்ஜர்லாந்து ஆகிய நாடுகள் தோற்றன.

இந்தியாவில் இந்த விளையாட்டு இங்கே இருந்த பிரிட்டிஷ் ராணுவத்தின் மூலம் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்டது. நமது நாட்டின் சீதோஷ்ண நிலையும் இவ்விளையாட்டு வளர்ச்சிக்கு மிகவும் உதவியது. அறிமுகமான ஒரு சில வருஷங்களுக்குள் ஹாக்கியில் இந்தியா ஒரு தலைசிறந்த நாடாகிவிட்டது. இதன் காரணமாக இந்தியாவெங்கும் ஹாக்கி கிளப்புகள் நிறுவப்பட்டன. இவற்றையெல்லாம் ஒன்றுபடுத்தி 1925—ம் ஆண்டு நவம்பர் 7ம் தேதி 'இந்திய ஹாக்கி ஃபெடரேஷன் தோற்றுவிக்கப்பட்டது.

ஹாக்கி ஃபெடரேஷன் ஏற்பட்ட பிறகு 1928ல் ஆம்ஸ்டர்டாம் நகரில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் இந்திய ஹாக்கி குழுவினர் கலந்து கொண்டனர். முதலில் இந்த ஒலிம்பிக் விளையாட்டில் 'ஹாக்கி' கைவிடப்பட்டது. ஆனால், 'இந்திய ஹாக்கி ஃபெடரேஷ'னின் வேண்டுகோளை ஏற்று, பிறகு சேர்க்கப்பட்டது.

இந்தப் போட்டியில் இந்தியா மகத்தான சாதனையைச் செய்தது. முப்பத்திரண்டு கோல்களைப் போட்டு உலக சாம்பியனாகியது. ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தையும் பெற்றது !

இந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள ஹாக்கி வீரர்கள், பம்பாய்



துறைமுகத்தில் இருந்து 1928 மார்ச் 10ந் தேதி புறப்பட்ட போது வழி அனுப்ப வந்தவர்களின் எண்ணிக்கை மூன்றே பேர்தான். ஆனால் அவர்கள் வெற்றி மாலையுடன் திரும்பி வந்தபோது பம்பாய்ப் பெருநகரமே கடல் அலை போல் ஆர்ப்பரித்து வரவேற்பு அளித்தது.

1932ல் லாஸ் ஏஞ்சல்ஸில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்திலும் 1936ல் பெர்லினில் நடந்த ஒலிம்பிக் போட்டியிலும் 1948வது வருடத்தில், லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியிலும் இந்தியாவே வென்றது. 1960ல் ரோம் நகரில் நடந்த போட்டியில் இந்தியா எதிர்பார்த்த வெற்றி அடையவில்லை. பாகிஸ்தானிடம் இந்தியா ஒரு கோலில் தோற்கும்படியாகி விட்டது !

முப்பத்தைந்து ஆண்டுகளாக ஹாக்கியில் தனித்து வெற்றி வாகை சூடிய இந்தியா 1960க்குப் பின் பல வீழ்ச்சிகளைச் சந்திக்கும் அவல நிலைக்கு வந்து விட்டது. 1964ல் லையான்ஸ் எனும் இடத்தில் நடந்த உலக ஹாக்கிப் போட்டியில் இந்தியாவே முதலிடம் பெற்றது. இதில் நியூஜிலாந்து, ஜெர்மனி, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. 1964ல் ஜப்பானில் நடந்த ஒலிம்பிக்கில் நமது நாடும் கலந்து கொண்டது. ஆனால் ஏனோ வெற்றி நழுவி விட்டது.

ஹாக்கி ஒரு சுறுசுறுப்பான விளையாட்டு. மிகவும் நுணுக்கம் நிறைந்த ஒன்று. இதற்கான விளையாடும் நேரம் எழுபது நிமிடங்கள். இடையில் பத்து நிமிடங்கள் இடைவேளை போக ஒருமணி நேரம் விளையாட்டு இருக்கும். இடைவேளைக்குப் பின் இரு தரப்பினரும் இடமாற்றம் செய்து கொள்வர்.

ஹாக்கி கோஷ்டி பதினொரு பேர்களைக் கொண்டதாக இருக்கும். ஏழு பேர்களும் இருப்பதுண்டு. இந்தப் பதினொரு பேர்களில், ஐந்து பார்வர்டுகள் (Forwards) மூன்று ஹாஃப் பேக்குகள் (Half Backs) இரண்டு பேக்குகள் (Backs) ஒரு கோல் கீப்பர் என்று பிரிந்து நிற்பார்கள். முன்னணியில் நிற்கும் ஐந்து பேர்கள் ஃபார்வர்டுகள், ஃபார்வர்டுகளுக்குப் பின்வரிசையில் இருப்பவர்கள் ஹாஃப் பேக்குகள். 'ஸ்டிரைக்கிங் சர்க்கிள்' அருகில் 'பேக்'குகள் நிற்பார்கள்.

பந்தை நடுவில் வைத்து இரண்டு கட்சி 'சென்டர் ' பார்வர்டு'களும் மூன்று முறை பூமியையும், ஸ்டிக்கையும் தட்டிய பிறகு, யாரோ ஒருவர் பந்தை அடிப்பதன் மூலம் விளையாட்டுத்' துவங்கும். இதற்குப் 'புல்லி தட்டுதல்' என்று பெயர்.

எம். ஜே. கோபாலன், ஆர். பிரான்சிஸ், வி. தேசமுத்து, ஆசைநாதன், எம். ராஜகோபால், ஜப்பார், கதிரேசன், மானுவல், பீட்டர், கிறிஸ்டி, கே. பி. விட்டல்ராவ், கே.பி. லட்சுமண ராவ், பி.ஆர். முருகேசன், எஸ். ரங்கசாமி, வி.வி. கோபாலரத்தினம் போன்ற தென்னிந்தியர்கள் ஹாக்கியில் சாதனைகளைப் புரிந்து இந்தியாவுக்குப் புகழ் வாங்கித் தந்தது குறிப்பிடத் தக்கது.

நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று பெண்களும் உற்சாகத்துடன் பங்கேற்ற விளையாட்டு ஹாக்கி. 1959ல் 'இந்திய பெண்கள் ஹாக்கி சங்கம்' ஏற்பட்டது. 1962ல் இலங்கையில் நடந்த முதல் பெண்கள் ஹாக்கிப் போட்டியில் ஐம்பத்தொன்பதுகோல்கள் போட்டு இந்தியப் பெண்கள் ஹாக்கி குழு மகத்தான சாதனையை ஏற்படுத்தியது. இந்தக் குழுவுக்குத் திருமதி பிரிட்டா காப்டனாக இருந்தார். திருமதி ஆன் லூம்ஸ்டன் அற்புதமாக விளையாடினார். திருமதி லூம்ஸ்டனுக்குப் பாரத அரசு 'அர்ஜுனா' பதக்கம் கொடுத்துக் கௌரவித்தது. பெண்கள் ஹாக்கியில் மைசூர்தான் முதலிடம் வகிக்கிறது.



பேராசைக்காரன்



ரமணன், குமணன் என்று இரண்டு பேர் அண்ணன் தம்பிகள். ரமணன் பேராசையுள்ளவன். குமணன் நல்லவன்; சூதுவாது அறியாதவன். ஆனால் புத்திசாலி.

பேராசையுள்ளவர்களுக்கும் தந்திரம் உள்ளவர்களுக்கும் பிறரைப் பிடிக்காது. தன் தம்பியை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான் ரமணன். சொத்து முழுமையும் தானே ஆண்டு அனுபவித்தான்.

ஏழைக் குமணன் பாடுபட்டு ஒரே ஒரு மாடு வாங்கப் பணம் சேர்த்தான். மற்றொரு மாட்டுக்குப் பதிலாகத் தானே நுகத்தடியில் நின்று இழுத்து ஒரு கண் இல்லாத தன் மனைவியை ஏர் பிடிக்கச் சொன்னான். வயல் காட்டில் நிலத்தை உழுதுகொண்டிருந்தான்.

அப்போது பார்வதியும் பரமசிவனும் ஆகாய மார்க்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். மாடும் — மனிதனும் சேர்ந்து உழுவதைப் பார்த்தார்கள்.

''தேவ தேவா! இந்த இருவரும் பரம ஏழைகள். இவர்களுக்கு உங்கள் அருள் தேவை'' என்றாள் பார்வதி தேவி.

''கொடுத்தோம்!'' என்றார் பரமசிவனார்.



உழுது பயிரிட்ட இடத்தில் பூசணிக் கொடிகள் போட்டான்; சுரையும் புடலும் விதைத்தான்.

அவன் காட்டிலே காய்கள் கணக்கில்லாமல் காய்த்துப் பருத்துக் கிடந்தன. குமணன் மனைவிக்குப் பெருமகிழ்ச்சி. ஒவ்வொரு பூசணியும் யானைக் குட்டி மாதிரி. ஒவ்வொரு புடலங்காயும் மலைப் பாம்பு மாதிரி; சுரைக்காய் ஒவ்வொன்றும் யானைத் துதிக்கை போல்!

குருவம்மை ஒரு பூசணி, ஒரு புடல், ஒரு சுரைக்காய் பறித்துக் கூடையில் வைத்துக் குடிசை வீட்டுக்குக் கொண்டு வந்தாள். அதனைத் தூக்கி வருவதே அவளுக்குச் சிரமமாக இருந்தது.

வீட்டுக்கு வந்து அறுத்துப் பார்த்தாள்; புடலங்காய் நிறையத் துவரம் பருப்பு! சுரைக்காயை அறுத்தாள், அத்தனையும் உளுத்தம் பருப்பு. ஆசையுடன் பூசணிக்காயை நறுக்கினாள். அத்தனையும் சீரகச் சம்பா அரிசி! உடனே ஓடிப் போய் ஒவ்வொரு காயையும் கீறிப் பார்த்தாள். அரிசியும், துவரம் பருப்பும், உளுத்தம் பருப்பும் கிடைத்தன. வீடு நிறைய அரிசி மூட்டை, வீடு நிறைய உளுத்தம் பருப்பு மூட்டை; வீடு நிறையத் துவரம் பருப்பு மூட்டை!

கொஞ்சம் கொஞ்சமாக விற்றுக் காசாக மாற்றிக் கொண்டார்கள். இச்செய்தி அறிந்த ரமணன் நெஞ்சம் குமுறியது. அரிசி, பருப்பு, உளுந்து அடுக்கி வைத்திருந்த ஓலைக் குடிசையைக் கொளுத்தி விட்டான்.

ஆண்டவன் கொடுத்த செல்வம் அத்தனையும் எரிந்து சாம்பலாயிற்று.

குமணன் மனம் நொந்தான். அத்தனை சாம்பலையும் மூட்டை கட்டினான். ஒரு வண்டி நிறைய இருபது மூட்டைகளை ஏற்றிக் கொண்டு சாம்பலை விற்றுக் காசாக்க எண்ணிப் புறப்பட்டான்.

சாலை வழியாக வண்டி போயிற்று. மிகுந்த செல்வந்தன் ஒருவன் தன் மகனை அழைத்துக் கொண்டு பக்கத்துக் கிராமத்துக்கு வந்து கொண்டிருந்தான். அந்தக் குழந்தையால் நடக்க முடியவில்லை ; அந்தக் குழந்தையைப் பணக்காரனால் சுமக்கவும் முடியவில்லை.

''வண்டிக்காரரே! இவன் என் பையன். இவனுக்கு உடல் நலமில்லை. இவனை வைத்தியர் வீட்டுக்கு அழைத்து வந்தேன். என் வண்டியில் அச்சு முறிந்து விட்டது. உன் வண்டியில் ஏற்றிக்கொள்!'' என்று கெஞ்சினான்.

''இதில் தங்கமும் வெள்ளியும் ஏற்றிக்கொண்டு போகிறேன். இதில் தகாத



நபர் ஏறினால் இந்த மூட்டைகள் அத்தனையும் சாம்பலாகப் போகும். எனவே ஏற்றிக் கொள்ள மாட்டேன்'' என்றான் குமணன்.

வண்டிக்காரன் மறுக்கவே ''நான் மிகப் பெரிய பணக்காரன். இதில் தங்கமும் வெள்ளியும் இருக்கலாம். அது சாம்பலாக மாறிப் போகுமானால் நான் அதன் மதிப்பைத் தருகிறேன்'' என்றான். பையனை ஏற்றி மூட்டை மீது வைத்தான். பணக்காரன் வண்டிக்குப் பின்னால் வந்தான்.

நகரத்தின் பக்கம் வண்டி வந்தது. வைத்தியர் வீடும் அங்கேதான் இருந்தது. பையனை வண்டியை விட்டு இறக்கினான் குமணன். ''அடடா! என் மூட்டைகள் அத்தனையும் சாம்பலாக மாறிப்போச்சே. இதோ பார்!'' என்று கத்த ஆரம்பித்தான். பணக்காரன் மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்தான். அத்தனையும் சாம்பலாக இருந்தன. தான் சொன்னபடி நிறையப் பணத்தைக் கொடுத்துக் குமணனை அனுப்பி வைத்தான்.

நிறையச் செல்வம் சேர்த்துக் கொண்டு தம்பி வீடு வந்த சேதியை அறிந்தான் ரமணன். பொறாமை கொண்ட அண்ணன் உள்ளம் விஷப் பாம்பாய்ச் சீறியது.

ரமணன் தானும் வண்டியிலே தன் வீட்டிலிருந்த சாம்பலை ஏற்றிக் கொண்டு போய் நகரத்தில் விற்க முயற்சி செய்தான். எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்கள். சாம்பலை எவரும் வாங்கவில்லை. நகரத்துத் தெருவோரம் கொட்டிவிட்டு வீடு திரும்பினான்.


தன்னை இப்படி அவமானப்படுத்திய தம்பியைப் பழி வாங்க எண்ணினான். இரவு நேரம். வீட்டுக்கு வெளியே குமணன் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தான். ஆட்களை வைத்து அவனைக் கட்டிலோடு கட்டி, ஆற்றிலே தூக்கி எறியும்படி சொன்னான். கட்டிலைச் சுமந்து வந்தவர்களுக்குப் பசி எடுக்கவே, ஒரு மரத்தடியில் கட்டிலை வைத்தார்கள். ஊருக்குள் போய்ச் சாப்பிட எண்ணினார்கள்.

அந்த இடத்துக்கு ஆடு மேய்க்கும் ஒருவன் வந்தான். கட்டிலில் கட்டப்பட்டுக் கிடக்கும் குமணனைப் பார்த்தான். ''ஏனப்பா உன்னைக் கட்டிலில் கட்டி வைத்திருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''எனக்குத் திருமணம் வேண்டாம் என்றேன். என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி என் வீட்டார் கட்டாயப்படுத்துகிறார்கள். அந்தப் பெண் பணக்காரி; நான் அவளை மணக்க முடியாது என்று அடம் பிடித்தேன். கட்டித் தூக்கிக் கொண்டு போகிறார்கள். எனக்குத் திருமணம் பிடிக்கவில்லை! நாளைக் காலையில் திருமணம்!''

'' கல்யாணம் வேண்டாம் என்று யாராவது சொல்லுவார்களா? அதுவும் பணக்கார இடம்!''





ஆடு மேய்க்கும் ஆள் கட்டிலிலிருந்து குமணனை அவிழ்த்தான். தான் படுத்துக் கொண்டான். கயிற்றைக் கொண்டு தன்னை இறுகக் கட்டிப் போடும்படி கேட்டுக் கொண்டான். குமணனும் அப்படியே செய்துவிட்டு எட்ட நடந்து போய் மறைந்து கொண்டான்.

கிராமத்துக்குள் சாப்பிடப் போனவர்கள் திரும்பி வந்தார்கள். கட்டிலை நாலு பக்கம் பிடித்துத் தூக்கினார்கள். தூக்கிக் கொண்டு போய்ப் பாலத்திலிருந்து ஆற்றுக்குள் வீசி விட்டார்கள்!

குமணன் ஆடு மேய்ப்பவனுக்குச் சொந்தமான ஆடுகளை ஓட்டிக் கொண்டு வீடு திரும்பினான்!

ரமணனுடைய கையாட்கள் குமணனை ஆற்றில் வீசியதைச் சொன்னார்கள்.

குமணனோ ஆட்டு மந்தையுடன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான்.

''என்ன நடந்தது தம்பி!'' என்றான் ரமணன்.

''அண்ணா உன் ஆட்கள் என்னை நடு ஆற்றில் போட்டிருக்கக் கூடாதா? ஆற்றங்கரை ஓரமாகப் போட்டார்கள். அங்கே இருந்த ஒரு தேவதை 'உனக்கு நூறு ஆடுகள் தருகிறேன் கொண்டு போ! நடு ஆற்றில் விழுந்திருந்தால் ஆயிரம் ஆடுகள், ஆயிரம் மாடுகள் தந்திருப்பேனே!' என்று சொன்னது. எனக்குத்தான் அவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் இல்லை!'' என்று குமணன் அழுதான்.

பேராசைக்கார ரமணனின் உள்ளம், ''ஆயிரம் ஆடுகள்!'' ''ஆயிரம் பசுக்கள்'' என்று துடித்தது.

''தம்பி! நீயே என்னை கட்டிலில் கட்டி எடுத்துப் போய் நட்டாற்றில் போடு. எனக்கு அத்தனையும் கிடைக்கட்டும்!'' என்றான்.

''நீ யாரிடமும் சொல்லாதே!'' என்றான் குமணன்.

''சொல்லவில்லை!'' என்றான் ரமணன்.

இரவோடு இரவாக ரமணனைக் கட்டிலில் கட்டி, ஆற்றுப் பாலத்துக்கு எடுத்துப் போனான். நடுப் பாலத்திலிருந்து தூக்கி எறிந்தான்!

ரமணன் ''ஆடுகள் ஆயிரம், மாடுகள் ஆயிரம்!'' என்று கத்திக் கொண்டே ஆற்றில் விழுந்தான். தொல்லையும் தொந்தரவும் தந்த ரமணன் ஆற்றோடு போய்ச் சேர்ந்தான்.

குமணன் நிம்மதியாக வந்தான்; வளத்தோடும், செல்வச் செழிப்போடும் ஆனந்தமாக மனைவியுடன் வாழ்ந்தான்.



அப்பப்பா, என்ன வேகம்?

பட்டுப் போன்ற அழகிய உடல், பெரிய கரிய கண்கள், மிருதுவான பார்வை, ஒய்யார நடை இத்தனையும் கொண்ட ஒரு மிருகத்தை வேட்டையாட யாருக்குத்தான் மனம் வரும்? இது மான் இனத்தைச் சேர்ந்தது. கஸல் (Gazelle) என்று பெயர்.

இவ்வகை மான்கள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் காணப்படுகின்றன. மற்ற மான்களிலிருந்து இதைத் தனிமைப்படுத்திக் காட்டுவது இதன் மெல்லிய கால்கள்தான். கஸலில் பல வகைகள் உண்டு. எந்த வகையானாலும் 35 அங்குலத்துக்கு மேல் இவைகளின் உயரம் இருக்காது. கலை மான்களைப் போல இதற்கும் கொம்புகள் உண்டு. ஆனால் கிளை கிளையாக இருக்காது. கிளைகள் இல்லாத கொஞ்சம் வளைந்த கொம்புகள், நிரந்தரமானவை. கலைமானைப் போல அடிக்கடி உதிர்ந்து வளரக் கூடியதல்ல. இதில் ஆண் பெண் இரு வகைக்கும் கொம்புகள் உண்டு.

கஸல் மான்கள் வேகமாக ஓடுவதற்குப் புகழ் பெற்றவை. துள்ளி ஓடும் மான் என்பார்களே, அது இதற்கு முற்றிலும் பொருந்தும். நன்கு வளர்ந்துள்ள ஆண் கஸல் இருபத்தைந்து அடிகளை ஒரே தாவலில் தாவிக் கடக்கும் வல்லமை உடையது.

சிங்கம், கழுதைப் புலி ஆகியவைகளினால் அதிகமாக வேட்டையாடப்படும் இது தன் அபாரமான வேகத்தினால்தான் உயிர் வாழ முடிகிறது. கலைமான் இனங்களிலேயே மிக வேகமாகப் பாய்ந்து செல்லக் கூடியது கஸல்தான். பிறந்து ஒரு மணி நேரமே ஆன குட்டிகள் கூட ஆபத்துக் காலங்களில் வெகு வேகமாக ஓடித் தப்ப முயலும். வேகம் அவைகளின் உடலோடு, ரத்தத்தோடு பிறந்த ஒன்று. மங்கோலியாவில் வாழும் ஒரு வகைக் கஸல்கள் மணிக்கு அறுபது மைல் வேகத்தில் ஓடக் கூடியவை.

வேகமாக ஓடித் தப்பும் குணமுடையதானாலும் ஆபத்துக் காலங்களில் எதிர்த்துப் போராடவும் செய்யும். கஸல் கூட்டத்தைச் சிங்கம் தாக்கும்போது ஆண் மான்களும் பெண் மான்களும் வட்டமாக நின்று கொண்டு எதிரியைத் தாக்கத் தங்கள் கூரான கொம்புகளை வட்டத்தின் வெளிப்பக்கமாக நீட்டியபடி நிற்கும். மந்தையில் ஒரு பெண் கஸல் குட்டி போட்டிருக்கிறது என்பதைச், சுலபமாகக் கண்டு கொள்ளலாம். எப்படி? கழுதைப் புலிகள் அந்தக் கூட்டத்தைப் பதுங்கிப் பதுங்கித் தொடர்ந்து கொண்டிருக்கும். மேலே கழுகுகள் தயாராக வட்டமிட்டுக் கொண்டிருக்கும்; பிறந்த குட்டியைப் பறந்தபடியே அடித்துக் கொண்டு செல்ல. இதன் உடலின் நிறம் இது வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப இருப்பதினால் இந்த அழகிய மான்கள் இத்தனை அபாயங்கள் இருந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. வாசனையை உணரும் சக்தியும் இவைகளுக்கு அபாரமாக உண்டு. எதிரிகள் இதன் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளு முன் அவற்றின் இருப்பிடத்தை இது மோப்பத்தினால் தெரிந்து கொண்டு விடும். வேகத்துக்குப் புகழ் பெற்ற இதன் பெயரை நம் நாட்டில் ஒரு காருக்கு வைத்திருக்கிறார்களே, தெரியுமோ?

ராஜா தோடர்மல்



இன்று நாட்டில் உணவுப் பற்றுக் குறையும், விவசாயிகளின் போராட்டமும் நிர்வாகக் குளறுபடிகளும் தலை தூக்கி நிற்கின்றன. நிலச் சீர்திருத்தத்தையும் நாட்டிலுள்ள நிலங்களையெல்லாம் அளந்து விளை நிலங்களுக்குத் தக்கபடி வரி விதித்து உழவர்களின் துன்பம் துடைக்கப் பல திட்டங்களையும் சட்டங்களையும் இயற்றினார் மொகலாயப் பேரரசில் இருந்த ஓர் இந்தியர்.

அவர் பெயர் **தோடர்மல்.**

அக்பரின் அவையை அலங்கரித்த ஒன்பது ரத்தினங்கள் என்று புகழப்பட்ட ஒப்பற்ற அறிவாளிகளுள் ஒருவர் இந்தத் தோடர்மல். இவர் ராஜ குடும்பத்தில் பிறந்தவரல்லர். சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ஓர் இந்தியக் குடிமகன்தான் இவர். உத்தரப் பிரதேசத்தில் உள்ள சீதாபூர் மாவட்டத்தைச் சேர்ந்த லஹர்பூர் என்ற கிராமத்தில் பிறந்தவர் தோடர்மல். அந்தக் காலத்தில் அரசாங்க அலுவலர்கள், ஏழை விவசாயிகளை வாட்டி வதைத்து வரி வசூலித்தனர். இதைக் கண்டு மனம் வேதனைப்பட்டார் தோடர்மல். அரசாங்கம் நடத்த வரி வாங்க வேண்டியதுதான். ஆனால் அதற்காக விவசாயிகளைக் கசக்கிப் பிழியக் கூடாது என்று வாதாடுவார். தம் பிராந்தியங்களிலிருந்து வரி வசூலிக்கும் இலாகாவில் சாதாரணக் குமாஸ்தாவாக இருந்த தோடர்மல் தம் மேலதிகாரிகளுக்கு வரி வசூல் செய்வதில் எளிய நியாயமான முறைகளைப் பற்றி விளக்குவார்.

நாளடைவில் தோடர்மல்லின் திறமை அக்பர் சக்கரவர்த்தியின் காதுகளுக்கும் எட்டியது. 1573ம் ஆண்டில் அக்பர் குஜராத் மாகாணத்தை வெற்றி கொண்டார். அங்குள்ள நிலங்களைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தோடர்மல்லுக்கு அளித்து அவரை அங்கு அனுப்பி வைத்தார். தோடர்மல் நிலங்களை அளந்து அவற்றின் தரம், அளவு, விளைவு ஆகியவற்றைக் கணக்கிட்டு அதற்குத் தக்கவாறு வரிகளை நிர்ணயித்தார். இரண்டே ஆண்டுகளில் நிலைமை சீரடைந்து விட்டது. விவசாயிகள் திருப்தியுடன் வரி செலுத்தினர். கஜானாவிலும் பொருள் குவிந்தது. இதனால் மிக்க மகிழ்ச்சி அடைந்த அக்பர் தமது சாம்ராஜ்யம் முழுதிலுமுள்ள நிலங்களுக்கு வரி விதிக்கும் பொறுப்பைத் தோடர்மல்லிடம் ஒப்படைத்தார். அவருக்கு 'ராஜா' என்ற விருதையும் அளித்துக் கௌரவித்தார்.

அக்பரது பரந்த சாம்ராஜ்யத்தைத் தோடர்மல் 182 மண்டலங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வரியாகக் கிடைத்தது. ஒவ்வொரு மண்டலமும் 'கரோடி' என்ற அதிகாரியின் மேற்பார்வையில் இயங்கியது. இந்தக் கரோடிகள் விவசாயிகளிடம் கருணை காட்டாத கொடியவர்களாக இருந்தனர். இஷ்டப்படி வரி விதித்தனர். தோடர்மல்லிடம் அதிகாரம் வந்ததும் இந்தக் கரோடிகளைக் கடுமையாகத் தண்டித்தார். பலரைச் சிறையில் தள்ளினார்.

தோடர்மல் நிலங்களை அளவெடுக்கத் தொடங்கும்போது சணல் கயிறுகளால் அளக்கும் பழக்கம் இருந்தது. சணல் கயிறுகள் நனைந்தால் அவை சுருங்கி விடும். உலர்ந்ததும் நீண்டு பெரிதாகும். ஆகவே இக்குறையை நீக்க இரும்புப் பட்டை கட்டிய மூங்கிலினால் ஆன அளவுத் தடிகளை உருவாக்கி அதன் மூலம் நிலங்களை அளக்கச் செய்தார். கிராம மணியக்காரர்கள் தங்கள் பிராந்தியத்தில் உள்ள நிலங்களை அளந்து பதிவு செய்து அவற்றின் நகல்களை மத்திய நிதி இலாகாவுக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டார். மத்திய நிதி இலாகாவின் தலைமை அதிகாரியான தோடர்மல் நாட்டிலுள்ள நிலங்களை போலஜ், பட்டீ, சாசர், பஞ்சர் என்று நான்கு வகைகளாகப் பிரித்தார். போலஜ் ஆண்டுக்கு இரு போகம் விளையும் மிக உயர்ந்த வகை நிலம். ஓர் ஆண்டு பயிர் செய்து அடுத்த ஆண்டு தரிசாகப் போடப்படும் நிலங்கள் பட்டீ எனப்பட்டன. ஒரு தடவை விளைந்த பிறகு மூன்று நான்கு ஆண்டுகள் தரிசாகக் கிடப்பவைகளை சாசர் வகையில் கணக்கிட்டார். இப்படி ஒவ்வொரு வகை நிலங்களிலும் ஓர் ஏக்கரின் சராசரி விளைச்சலைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடி வரி விதித்தார் தோடர்மல்.

வரி வசூலில் இன்னும் பல முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் செய்து நாட்டின் பொருளாதாரத்தையும் அமைதியையும் அதிகமாக்கினார். வரியைப் பண்ட உருவில்தான் செலுத்தி வந்தனர். தோடர்மல் இதிலும் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்தார். முந்திய பத்தாண்டுகளில் தானியங்களின் விலை 'ஏற்ற இறக்கங்களைக் கணக்கிட்டு அதற்குத் தக்கபடி ரொக்கமாகவும் வரி செலுத்தலாம் என்ற வழக்கத்தை ஏற்படுத்தினார். விவசாயிகள் விரும்பினால் தானியமாகவும் வரியைத் தரலாம் என்று வசதி செய்து கொடுத்தார். பஞ்சம், பருவ நிலை பொய்த்தல் ஆகிய நெருக்கடிக் காலங்களில் வரிகளைக் குறைத்தோ அல்லது முழுதுமாக வஜா செய்யலாம் என்ற வழக்கத்தையும் கொண்டு வந்தார். இதற்குத்தான் 'தக்காவி'க் கடனுதவி என்று பெயர். இத்தகைய சீர்திருத்தங்களினால் விவசாயிகளுக்குத் தெய்வமாகவும் அடாபிடி வரி வசூலில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களுக்கு எமனாகவும் விளங்கினார் தோடர்மல்.

அரசாங்க உயர் பதவிகளில் முஸ்லிம்களைப் போலவே இந்துக்களும் இடம் பெற வேண்டும் என்பதில் நாட்டம் உடையவராக இருந்தார் தோடர்மல். அதற்காக வரி வசூல் சம்பந்தமான புத்தகங்களைப் பாரசிக மொழியில் வெளியிட்டார். இதைப் படித்துத் தெரிந்து கொள்ள இந்துக்களும் பாரசிக மொழியைப் பயின்றனர். பாரசிக மொழி தெரிந்ததினால் இந்துக்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகளைப் பெறுவது சுலபமாயிற்று.

இந்துக்களுக்கு மட்டுமே விதித்து வந்த ஜஸியா என்ற தலை வரி அநீதியானது என்று அக்பரிடம் எடுத்துக் கூறி அதை நீக்கினார் தோடர்மல். முஸ்லிம் அரசில் உயர் பதவி வகித்தாலும் தோடர்மல் தாம் ஓர் இந்து என்பதை மறந்ததே இல்லை. தினமும் பூஜையை முடிக்காமல் எந்த வேலையையும் மேற்கொள்ள மாட்டார். வீட்டில் இந்துவாக உடையணிந்திருப்பார். அரசவைக்குப் போகும் போது மொகலாய பாணியில் உடையணிந்து போவார். துருக்கர் போல் உடை அணிவதாலும், அந்த மொழியைப் பேசுவதாலும் ஓர் இந்து துருக்கராகிவிடமாட்டான் என்பது தோடர்மலின் கருத்து. அக்பரின் புதிய மதமான தீன் இலாஹியை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்து இந்துவாகவே இருக்க வேண்டும் என்று விரும்பி அதன்படி வாழ்ந்து காட்டியவர் தோடர்மல்.

சிறந்த அறிவாளியும் அரசியல் நிர்வாகியுமாக மட்டுமல்லாது சிறந்த வீரராகவும் விளங்கினார் தோடர்மல். பல போர்களின் தோல்வியை வெற்றியாக்கித் தரத் தமது படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்லுமாறு தோடர்மல்லை அனுப்புவார் அக்பர். தில்லியிலிருந்து வெகு தொலைவில் இருந்ததால் வங்கத்தில் அடிக்கடி கலகம் ஏற்பட்டு வந்தது. ஆகவே அதை ஒழுங்குபடுத்தத் தோடர்மல் அங்கு அனுப்பப்பட்டார். நான்கே ஆண்டுகளில் வங்கத்தின் நிர்வாகத்தை ஒழுங்காக்கி அங்கு அமைதியை







நிலைநாட்டினார். அதே போல் குஜராத்தில் கல்தான் ஜபரைத் தோற்கடித்து அங்கும் அமைதியை உண்டாக்கினார்.

நிலச் சீர்திருத்தம் தோடர்மல்லின் சிறப்பான ஏற்பாடு என்றாலும் அக்பரின் படை பலத்தை அதிகரித்து அதிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தவர் தோடர்மல். அந்தக் காலத்தில் மன்சப்தாரி என்ற வழக்கம் உண்டு. மன்ஸப்தார்கள் தங்கள் பொறுப்பில் தரைப் படை, குதிரைப்படைகளைப் பராமரித்து வருவர். இதற்காக மன்னர் இவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வந்தார். மன்ஸப்தார்கள் இந்தச் சம்பளத்தை வாங்கித் தங்கள் சொந்தச் செலவுகளைச் செய்து கொண்டு மன்னரின் பேட்டியின் போது வாடகைக் குதிரைகளை அமர்த்தி அதைக் காட்டி வந்தனர். இதை அறிந்த தோடர்மல் குதிரைகளுக்குச் சூடு போட்டுக் குறியிடும்—முறையைக் கொண்டு வந்தார். வாடகைக் குதிரைக்குச் சூடு போட முடியுமா? சூட்டுக் குறியுள்ள குதிரைகள் அரசாங்கச் சொத்தாகிவிடுமே. இதுபோல் தங்களிடமுள்ள படை வீரர்களின் பெயர்ப் பட்டியலையும் ஒவ்வொரு மன்ஸப்தாரும் வைத்திருக்க வேண்டும் என்று சட்டமிட்டார்.

போர்க்களங்களுக்குச் செல்லும் படை வீரர்களுக்கு உணவு உடை ஆயுதம் ஆகியவை எவ்விதத் தடங்கலும் இன்றிச் செல்லுவதற்கான ஏற்பாடுகளையும் செய்தார் தோடர்மல். அக்பருக்குத் தோடர்மல்லிடம் அசைக்க முடியாத நம்பிக்கை. பெரிய பொறுப்புக்களை ஒப்படைத்தார் அக்பர். 1589ல் அக்பர் காஷ்மீர்ப் பயணத்தை மேற்கொண்டபோது ராஜ்யத்தின் நிர்வாகத்தையும் தலைநகர்ப் பாதுகாப்பையும் தோடர்மல்லிடமே ஒப்படைத்துப் போனார் என்றால் பாருங்கள். தோடர்மல்லினுடைய விரோதிகளுமேகூட அவரது துணிவையும் நேர்மை தவறாத ஆட்சி முறையையும் வெகுவாகப் பாராட்டினர்.


தோடர்மல்லுக்கு வயதாகிவிட்டது. தமது கடைசிக் காலத்தை ஹரித்துவாரத்தில் கழிக்க விரும்பினார். அவரது வேண்டுகோளை அக்பரும் ஏற்றுக் கொண்டார். ஹரித்துவாரத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது அக்பரிடமிருந்து ஓர் உத்தரவு வந்தது. ''கடவுளின் படைப்பான மனிதருக்குச் செய்யும் தொண்டே உண்மையான கடவுள் வழிபாடாகும்'' என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அரசாங்கத்தில் அவரது சேவை இன்னும் கொஞ்ச காலத்துக்குத் தேவை என்பதைக் குறிப்பாக உணர்த்தியிருந்தார் அக்பர். தோடர்மல்லும் அதைப் புரிந்துகொண்டு தம் பிரயாணத்தை நிறுத்திவிட்டுத் தலைநகருக்குத் திரும்பிவிட்டார்.


ஆனால்... இதற்குப் பதினோராவது நாளில் தோடர்மல் கொல்லப்பட்டார். ஏதோ ஒரு குற்றத்துக்காக முன்பு அவரால் தண்டிக்கப் பெற்றவன் அதற்காகப் பழி தீர்த்துக் கொண்டு விட்டான். தலைசிறந்த அரசியல் நிர்வாகியும் அறிவாளியுமான ஒருவரின் வாழ்வு இப்படிக் கொடுமையாக முடிவடைந்தது.

தோசைகளும் காசும்

ஒரு சேணியனும் கன்னனும் பக்கத்து ஊரில் கூடும் சந்தைக்குப் போனார்கள். நீண்ட தூரப் பயணமானதினால் இருவரும் பகல் உணவுக்குத் தோசை கட்டுக் கொண்டு வந்திருந்தார்கள். சந்தையில் இவர்களுடைய நெடு நாளைய நண்பனான குயவன் ஒருவனும் சேர்ந்து கொண்டான். மூவரும் சந்தைக் காரியங்களை முடித்துக் கொண்டு ஒரு மரத்தடியில் உணவருந்த உட்கார்ந்தார்கள். குயவன் ஏதும் கொண்டு வராவிட்டாலும் மற்ற இருவரும் தாங்கள் கொண்டு வந்திருப்பதில் பங்கு தருவதாகக் கூறினார்கள். சேணியன் ஐந்து தோசைகளும், கன்னன் மூன்று தோசைகளும் கொண்டு வந்திருந்தார்கள். எட்டுத் தோசைகளையும் மூவரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். குயவன் எட்டுக் காசுகளை அவர்களிடம் கொடுத்து அவரவர் கொடுத்த தோசைகளுக்கு ஏற்ப அதைப் பங்கு போட்டுக் கொள்ளும்படி கூறினான். எப்படிப் பிரித்துக் கொள்ளுவது என்று குழப்பம் வந்த போது அருகிலிருந்த ஒருவன் சேணியன் ஐந்து காசும் கன்னன் மூன்று காசுமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்றான். அங்கிருந்த ஒரு விவசாயி சொன்னது வேடிக்கையாக இருந்தது. சேணியனுக்கு ஏழு காசும் கன்னனுக்கு ஒரே ஒரு காசும்தான் சேரவேண்டும் என்றான். எல்லாரும் சிரித்துவிட்டார்கள். சிலர் சரி சமமாகப் பங்கிட்டுக் கொள்ளச் சொன்னார்கள். ஆனால் எதுவுமே சரியான முடிவாக ஏற்கப்படவில்லை. மூவரும் சமமான அளவு தோசைகளைச் சாப்பிட்டிருந்தார்கள். உங்களால் கூற முடியுமா, யாருக்கு எவ்வளவு காசு சேர வேண்டும் என்று?







பூர்த்தி செய்

மேலே இடது பக்கம் கொடுத்துள்ள அமைப்புக்களிலிருந்து ஏதோ ஒன்று வலது பக்கம் கேள்விக்குறியிட்ட பகுதிக்குப் பொருத்தமாகப் போக வேண்டும். அது எந்த எண்ணுடைய அமைப்பு என்று சட்டென்று முடிவு கட்டுங்கள், பார்க்கலாம்.

தோசைகளும் காசும் விடை: ஏழை விவசாயி கூறியதுதான் சரி. சேணியனுக்கு ஏழு காசும் கன்னனுக்கு ஒரு காசும்தான் சேர வேண்டும். மூவரும் சமமான அளவு சாப்பிட்டுள்ளார்கள். அதாவது 8/3. சேணியனிடம் 15/3 இருந்ததாக வைத்துக் கொண்டால் அவன் சாப்பிட்டது 8/3 குயவனுக்குக் கொடுத்தது 7/3. அதேபோல் கன்னனிடம் 9/3 தோசை இருந்ததாகக் கொண்டால் அவன் சாப்பிட்டது 8/3. குயவனுக்குக் கொடுத்தது 1/3. ஆகவே சேணியனும் கன்னனும் முறையே தங்கள் பங்குகளிலிருந்து 7ம் 1ம் தான் குயவனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படியே பணத்தையும் பங்கு போட வேண்டியதுதானே?

பூர்த்தி செய் விடை: ஒவ்வொரு வரிசையிலும் உள்ள அமைப்புக்களில் வட்டம், முக்கோணம், சதுரம் உள்ளும் வெளியுமாக அமைந்திருக்கின்றன. உள் அமைப்புக்கள் ஒவ்வொரு வரிசையிலும் கறுப்பு, வெள்ளை, கோடு ஆகிய முறையிலும் இருக்கின்றன. கேள்விக் குறியிட்ட மூன்றாவது வரிசையில் முக்கோண வெளி அமைப்பு இல்லை. உள் அமைப்பில் கறுப்பும், சதுரமும் இல்லை. ஆகவே இவ்விரண்டும் உள்ளது 6. இதுவே அங்கு போக வேண்டும்.

ஆசை!

பி.வி.கிரி

அன்று அந்த மண்டபம் விழாக் கோலம் பூண்டிருந்தது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் மண்டபத்துக்குள்ளே வந்து கொண்டிருந்தனர்.

ராமுவும் தன் தந்தையுடன் வந்து முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டான். ராமுவின் தந்தையின் நண்பர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். அவருக்கு வரவேற்புக் கொடுக்கவே அந்த விழா நடந்து கொண்டிருந்தது.

ராமுவின் தந்தை பெரிய ரோஜாப்பூ மாலை ஒன்றை வாங்கிக் கொண்டு வந்திருந்தார். அதைப் போல விழாவுக்கு வந்திருந்தவர்களில் பலர் பூமாலை, வாழ்த்துப் பா, மற்றும் பல பரிசுப் பொருள்களை எடுத்து வந்திருந்தனர்.

வெளி நாட்டுக்குப் போய் வந்தவரைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். மலைபோல் மாலை குவிந்ததைக் கண்ட அவனுக்கு மலைப்பே ஏற்பட்டது. விழா முடிந்தது. அனைவரும் கலைந்து சென்றனர். வீட்டுக்கு வந்த ராமுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. விழா மண்டபமே அவன் கண்முன் வட்டமிட்டது.

மறுநாள் பள்ளியில் தன் நண்பர்களிடம் முந்தைய நாள் பாராட்டு விழாச் சம்பவங்களைச் சொல்லிவிட்டு, ''எனக்கும் இப்படி மாலைகள் விழுந்தால் எப்படி இருக்கும்?'' என்று பெருமூச்சு விட்டான் ராமு.

பள்ளியில் கட்டுரைப் போட்டியில் யாராவது பரிசு பெற்றால், அந்தப் பரிசு தமக்குக் கிடைத்தால் எவ்வளவு பெருமையாக இருக்கும் என்று பொறாமைப்படுவான். அதை நண்பர்களிடம் சொல்லிப் பெருமூச்சு விடுவான். விளையாட்டுப் போட்டியில் யாராவது வெள்ளிக் கோப்பைப் பரிசு பெற்றால், 'இந்தக் கோப்பை எனக்குக் கிடைக்கவில்லையே! கிடைத்தால் என் அம்மாவும் அப்பாவும் என்னை எப்படிப் பாராட்டுவார்கள் தெரியுமா?' என்று அங்கலாய்ப்பான். ராமுவுக்கு அளவு கடந்த ஆசை இருந்ததே தவிர, முயற்சி என்பது சிறிதும் இல்லை.

ஒரு சமயம் ராமுவின் மாமா நோய் வாய்ப்பட்டு மருத்துவ மனையில் இருந்தார். அவரைப் பார்ப்பதற்காகத் தம் தாய் தந்தையருடன் ராமுவும் மருத்துவ மனைக்குச் சென்றான்.

ராமுவின் பெற்றோர்கள் நோய் வாய்ப் பட்டவருக்கு ஆப்பிள், திராட்சை, ரொட்டி ஆகியவற்றைக் கொண்டு போய்க் கொடுத்து அவர் உடல் நலத்தை விசாரித்தனர். உடனே ராமுவின் மாமா ராமுவைத் தம் பக்கம் அழைத்து ஓர் ஆப்பிளை அவன் கையில் திணித்தார். 'வேண்டாம் வேண்டாம்' என்று கூறியபடியே அதை வாங்கிக் கொண்டான், ராமு!

ராமுவின் மாமாவைப் பார்க்க நண்பர்களும் மற்ற உறவினர்களும் வந்திருந்தனர். அவர்களும் ஆப்பிள், திராட்சை, வாழைப்பழம், பிஸ்கட், ரொட்டி முதலியவற்றைக் கொடுத்தார்கள். இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராமுவுக்கு நாக்கில் நீர் ஊறியது. 'இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒன்றைத் தனக்கு மாமா கொடுக்க மாட்டாரா?' என்று எண்ணி ஏங்கினான்.

வீட்டுக்கு வந்த பிறகும்கூட அவன் தன் மாமாவைப் பற்றி நினைக்கவில்லை. அங்கே அவரிடம் கொடுத்த பலவிதமான பழங்களே அவன் கண் முன்னால் வந்தன. அவனால் பொறுக்க முடியவில்லை. பிறகு ஒரு முடிவுக்கு வந்தான்.

மறுநாள் பள்ளிக்கு வந்ததும் வராததுமாக நண்பர்களிடம் முந்தைய நாள் தான் மருத்துவ மனைக்குப் போய் வந்த விவரத்தைக் கூறினான் ராமு. பின்பு ஒருவனைப் பார்த்து ''டேய்! நான் உடம்பு சரியில்லாமல் இருந்தால், இப்படி எல்லோரும் ஆப்பிள், திராட்சை, ரொட்டியுடன் என்னை வந்து பார்ப்பீர்களா, இல்லையா?'' என்றான் மிக்க ஆவலாக.

''நிச்சயமாக! நாளைக்கே உன் உடம்புக்கு ஏதாவது வந்து விட்டது என்று வைத்துக் கொள். உடனே நாங்கள் சொன்னது போல் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு உன்னைப் பார்க்க வருவோம். என்ன இருந்தாலும் நீ எங்களுடைய நண்பன் இல்லையா?'' என்றான்.

அதற்கு ஒருவன், ''உனக்குத்தான் உடம்புக்கு ஒன்றும் வர மாட்டேங்கிறதே...'' என்றான் சலிப்பாக நண்பர்களில் ஒருவன், புன்னகையுடன்.

ஒரு நாள் ராமுவின் அம்மாவும் அப்பாவும் சென்னைக்கு அருகே உள்ள ஓர் ஊருக்குப் போயிருந்தார்கள். காலை

யில் சென்ற அவர்கள் இரவுக்குள் வந்து விடுவோம் என்றும், பத்திரமாகப் பள்ளிக்கூடம் போய் வந்து வீட்டைப் பார்த்துக் கொள் என்றும் சொல்லி விட்டுச் சென்றிருந்தனர்.

இதுதான் நல்ல சமயம் என்றிருந்த ராமு, தனக்குக் கடுமையான காய்ச்சல் என்றும், வீட்டில் ஒருவருமில்லாமல் படுத்த படுக்கையாய் இருப்பதாகவும் குறிப்பிட்டு இன்றைக்கு மட்டும் ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டுமென்றும் கேட்டு ஒரு கடிதம் எழுதினான். உடனே அதைப் பக்கத்து வீட்டுப் பையன் மூலம் பள்ளிக்குக் கொடுத்து அனுப்பினான்.

வகுப்பு ஆசிரியர் மூலம், ராமுவுக்குக் கடுமையான காய்ச்சல் என்று தெரிந்து கொண்ட மற்ற மாணவர்கள் ''பாவம், ராமு! இன்று மாலை அவனைப் போய்ப் பார்க்க வேண்டும்!'' என்று பேசிக் கொண்டனர்.

மாலை வகுப்பு எப்போது முடியும் என்று ராமுவின் நண்பர்கள் காத்திருந்தனர். மணி அடித்ததுதான் தாமதம். எல்லோரும் ஓர் இடத்தில் கூடிக் 'குசுகுசு'வெனப் பேசினர். பிறகு ராமுவின் வீட்டுக்குச் சென்றனர்.

நண்பர்கள் தன்னைப் பார்க்க வருகிறார்களா இல்லையா என்று தன் வீட்டு மாடி ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டே யிருந்தான் ராமு.

தெருக் கோடியில் தன் நண்பர்கள் கையில் பொட்டலங்களுடன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். உடனே மாடியிலிருந்து கீழே மடமடவென்று இறங்கி வந்து கட்டிலில் படுத்துக் கொண்டு போர்வையை எடுத்து நன்றாகப் போர்த்திக்கொண்டான். 'ஆ.... அம்மா....ஐயோ!...' என்று முனகினான். அப்போது அவன் கண்முன் ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு முதலிய பழங்கள் வந்து நின்றன!

நண்பர்கள் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுடன் ஒரு பெரியவர் வருகிறாரே அவர் யார்? அவர்களைப் பார்த்ததும் முனகல் சத்தம் இன்னும் கொஞ்சம் அதிகமாகியது. அனைவரும் கட்டில் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர்.

''ராமு! இப்போது எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான் ஒருவன்.

''மிகவும் மோசமாயிருக்கிறது. அதே சமயத்தில் ரொம்பவும் பசியாகவும் இருக்கிறது... வீட்டில் யாரும் இல்லை. ஊருக்குப் போயிருக்கிறார்கள்'' என்று நோய்வாய்ப்பட்டவன் போல் பாசாங்கு செய்தான் ராமு.

''ஐயோ, பாவம்! வீட்டில் யாரும் இல்லை என்று தெரிந்துதான் நாங்கள் இந்த டாக்டரையும் கையோடு அழைத்து வந்தோம்...'' என்றான் மற்றவன்.

''என்ன? டாக்டரா?'' என்று ராமு திகிலுடன் கேட்டான்.

''ஆமாண்டா! இவரு நாட்டு வைத்தியரு. இவரு நாடி பிடிச்சுப் பார்த்தால் எல்லாமே ஓடிப் போயிடும்!'' என்றான் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு ஒருவன்.

உடனே நாட்டு வைத்தியர் ராமுவின் நாடியைப் பிடித்துப் பார்த்து விட்டு, ''நாக்கை நீட்டு'' என்றார். வயிற்றை நன்றாகப் பிசைந்து பார்த்தார். எல்லாரும் அவர் முகத்தையே பார்த்தனர். ராமுவுக்கோ மனம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது.



ஓ! அப்படியா?



பட்டு: உன் உடலுக்குள்ளே விசிறி ஏதும் இல்லே. ஆனால் உன் வயிற்றிலிருந்து புகை எப்படி மேலே கிளம்பிப் போகிறது?

பாய்லர்: என்னுள்ளிலிருந்து வெளியேறுவது உஷ்ணமான காற்று. உஷ்ணமான காற்று எப்போதும் மேல் நோக்கித்தான் போகும். ஏனென்றால் குளிர்ந்த காற்றைவிட உஷ்ணமான காற்று இலேசானது. என்னுள்ளிருந்து உஷ்ணமான காற்று நுண்ணிய கரித் தூள்களைச் சுமந்தபடி மேலே போகிறது. அதைத்தான் நீ புகை என்கிறாய்.

எங்கே தன் குட்டு வெளிப்பட்டு விடுமோ என்று!

''என்ன வைத்தியரே! எப்படி இருக்கிறது உடம்பு?'' என்றான் ஒரு மாணவன்.

''எனக்கு நன்றாகத்தான் இருக்கிறது, தம்பி! ஆனால், இவனுக்குத்தான் வயிற்றில் ஒரு பெரிய கட்டி கெட்டியாக இருக்கிறது. அதனால் வயிற்றை அறுக்க வேண்டும்...''

''என்ன, வயிற்றை அறுக்க வேண்டுமா?'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான் ராமு.


''அதுமட்டுமல்ல. உனக்கு நிறைய சளி பிடித்திருக்கிறது. அதனால் அடிக்கடி மூக்கடைப்பு ஏற்பட்டு நாளை உயிருக்கே கூட ஆபத்து ஏற்படலாம். ஆகவே மூக்கையும் அறுத்து, இல்லே, இல்லே. ஒரு சிறு ஆபரேஷன் செய்து'' என்று நாட்டு வைத்தியர் சொல்லி முடிப்பதற்குள் கட்டிலிலிருந்து தொப்பெனக் கீழே குதித்து, ''எனக்குக் காய்ச்சலுமில்லே, கத்தரிக்காயுமில்லே! ஆப்பிள்.... திராட்சை.... ரொட்டி.... வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே ஓடினான் ராமு.

வைத்தியரும், மற்றவர்களும் அவனை வீடு முழுவதும் ஓடிப் பிடித்து வந்து மறுபடியும் கட்டிலில் உட்காரவைத்துத் தாங்கள் கொண்டு வந்திருந்த பொட்டலங்களையெல்லாம் அவனிடம் கொடுத்து விட்டு, ''நாங்கள் வருகிறோம்... உடம்பு ஜாக்கிரதை!'' என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

பொட்டலங்களை மிக்க ஆவலுடன் பெற்றுக் கொண்டு ராமு, ''அம்மா அப்பா வருவதற்குள் இவைகளை எல்லாம் தின்று தீர்த்து விட வேண்டும். இல்லாவிட்டால் விபரீதமாக முடிந்து விடும்...'' என்று அவசரம் அவசரமாக ஒவ்வொரு பொட்டலத்தையும் பிரித்துப் பார்த்தான். ஒன்றில் சிவந்த ஆப்பிள் இருந்தது. மற்றொன்றில் கருந் திராட்சை கொத்தாக இருந்தது. இன்னொன்றில் பெரிய ரொட்டி இருந்தது. உடனே ஆப்பிளைக் கடிக்க வாயருகே கொண்டு போனபோது அது கை தவறிக் கீழே விழுந்து 'டொக்' என்று சத்தம் கேட்டது. அதை எடுத்து உற்றுப் பார்த்தபோதுதான் அது பிளாஸ்டிக்கினாலான ஆப்பிள் என்று தெரிந்தது! இதைப் போலவே திராட்சையும் ரொட்டியும் கடைகளில் விற்கும் பிளாஸ்டிக் பொம்மை என்று தெரிந்தது. இதைக் கண்ட ராமுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. கட்டிலினருகே ஒரு கடிதம் இருந்தது. அதில்—

''டேய், ராமு! உன் அளவற்ற ஆசையை அடக்கவே இந்தத் திட்டம் தீட்டினோம். உன்னை அவமானப்படுத்த வேண்டும் என்பது எங்கள் எண்ணமல்ல. டேய், ராமு! இப்போதாவது நீ திருந்துவாய் என்று எண்ணுகிறோம். கட்டுரைப் போட்டியில் நீயும் கலந்து கொண்டு எழுது. விளையாட்டுப் போட்டியில் நீயும் விளையாடி வெற்றி பெறு. முயற்சி செய். உழைக்கத் தளராதே. பள்ளிப் பாடத்தோடு இதையும் நாம் கற்க வேண்டும்.''

கடிதத்தைப் படித்து முடிப்பதற்கும் ராமுவின் அம்மா அப்பா வருவதற்கும் சரியாக இருந்தது!



1119. அமெரிக்க சினிமா உலகில் புகழ்பெற்ற படங்களுக்கும் நடிகர்களுக்கும் மற்றும் தொழில் நுணுக்கக் கலைஞர்களுக்கும் 'ஆஸ்கார்' என்ற பரிசு வழங்கிக் கௌரவிப்பார்கள். இது மிக உயர்ந்த கௌரவமும் பரிசுமாகும். இந்த ஆஸ்கார் பரிசை மிக அதிகமாகப் பெற்றவர் யார்?

1120. ஜேம்ஸ் பாண்ட் படங்கள் மிகப் பிரபலமானவை. இரகசிய உளவாளியாக வரும் பாண்டுக்கு இன்னொரு சங்கேதப் பெயர் உண்டு. அது என்ன?

1121. நாக்டர்னல் (Nocturnal) ஜந்துக்கள் என்றால் என்ன?

1122. லெமூர் என்ற பிராணி உலகில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே காணப்படுகிறது. அது எங்கே? அதில் மிகப் பெரிய இனத்தின் பெயர் என்ன?

1123. ஐரோப்பிய பொதுச் சந்தையின் (Commen Market) தலைமையகம் எந்த நாட்டில் உள்ளது?

1124. கென்ட் மாகாணத்திலுள்ள வெஸ்டர்ஹாம் என்னும் இடத்தில் சர். வின்ஸ்டன் சர்ச்சிலின் வீடு இருக்கிறது. அதன் பெயர் தெரியுமா?

1125. விக்டோரியா மகாராணி யாருக்கு விருப்பமானது ஓர் அரண்மனை. வெயிட் தீவில் (Isla of Weight) விசேஷமாகக் கட்டப்பட்ட இவ்வரண்மனையில்தான் 1901ல் அவர் காலமானார். இதன் பெயர் என்ன?

1126. இங்கிலாந்திலிருக்கும் ப்ளீட் தெரு எதற்குப் புகழ் பெற்றது தெரியுமா?

1127. எஸ்கிமோக்கள் உலகின் எந்தப் பகுதியில் வசிக்கிறார்கள்?

1128. எஸ்கிமோக்களின் பனிக் கட்டியினாலான வீடுகளுக்கு என்ன பெயர்?

1129. கயாக் என்றால் என்ன?

1130. எஸ்கிமோக்கள் தங்களுக்குள் பெயர் வைத்துக் கொள்வது எப்படி?

1131. எஸ்கிமோ என்று ஐரோப்பியர்களால் இந்த இனத்தவருக்குப் பெயரிடப்பட்டது. இந்த வார்த்தையின் பொருள் என்ன தெரியுமா?

1132. தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட பகுதிகளில் அடிமைச் சந்தையை ஒழிப்பதற்காகப் பாடுபட்டவர் யார்?

1133: மீனுக்குக் காது உண்டா? அவை எப்படிக் கேட்கின்றன?

1134. மீனுக்குப் பெரிய கண்கள் உண்டு இல்லையா? ஆனால் அவைகளினால் மிக அருகில் உள்ள பொருள்களை மட்டுமே காண முடியும். இக்கண்களினால் அதிக உபயோகம் கிடையாது. அப்படியானால் தங்களைச் சுற்றி நிகழ்பவைகளை மீன்கள் எப்படிக் காண்கின்றன?

1119. வால்ட் டிஸ்னி. 35 ஆஸ்கார்களைப் பெற்றிருக்கிறார். 1120. நாட் நாட் செவன் (007). 1121. இரவு வேளையில் சுறுசுறுப்பாக இயங்கும் ஜந்துக்களுக்கு இப் பெயர். 1122. மடகாஸ்கரில். இன்ட்ரி (Indri) என்ற லெமூர் மிகப் பெரியது. 1123. பெல்ஜியத்தில் உள்ள பிரஸல்ஸ் நகரில். 1124. சார்ட்வெல் (Chartwell). 1125. ஆஸ்பர்ன் ஹவுஸ் என்று பெயர். 1126. இங்கு பல தேசியப் பத்திரிகாலயங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அதனால். 1127. ஆர்க்டிக் கடற்கரை ஓரங்களிலும் தீபகற்பங்களிலும் தீவுகளிலும். 1128. இக்லூஸ் (Igloos) என்று பெயர். 1129. கடல் வேட்டைக்காக எஸ்கிமோக்கள் பயன்படுத்தும் தோலினாலான சிறிய படகுக்கு இப் பெயர். 1130. இனுயிட் என்று. இதற்கு மக்கள் என்று பெயர். 1131. செவ்விந்தியர்களுடைய மொழியிலிருந்து உருவானது இப் பெயர். பச்சை மாமிசம் சாப்பிடுபவர்கள் என்று பொருள். 1132. வில்லியம் வில்பர் ஃபோர்ஸ் என்பவர். 1133. தண்ணீரில் ஏற்படும் சலனங்களை அதன் உடலில் உள்ள ஒருவகை உறுப்புக்கள் கிரகிக்கின்றன. இவ்வுறுப்புக்கள் மீனின் உடலின் இரு பக்கங்களிலும் சிறிய குழாய்களைப் போல் வரிசையாக இருக்கின்றன. 1134. தண்ணீரின் ருசியைக் கொண்டு, சற்றுத் தூரத்தில் வரும் வேறு ஜந்துக்களின் சுவையைக் கண்டுகொள்ளும் சக்தி மீன்களுக்கு உண்டு.





● 'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் திருவனந்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர் : கே. ஆர். ஆத்மநாதன்

சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!

இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய் - 400001

